பதிவு எண் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை {உள் நாடு 1 அணா {வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| அறு சந்தா முன் பணம் ... ரூ 3—0 | வாரப்பதிப்பு. | வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12. |
| 6 மாத சந்தா ,, ... ரூ 1-12 | ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி, | கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2 |
| வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0 | | நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 4 | ஈரோடு, விபவ ஆடி மீ 14 உ (29—7—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 14



:: ரஸ்டன் ஹெலிகல் ::

சென்ட்ரிப்யூகல் பம்புகள்.

விவசாயத்துக்கு இன்றியமையாதது.
நிமிஷம் 1க்கு 100 முதல் 4800 காலன் வரை
80 அடி உயரத்திற்கு தண்ணீர்
எடுக்கக்கூடியது.
கோயமுத்தூரில் தயாரில் இருக்கின்றன.

- ரஸ்டன்-ஹார்ன்ஸ்பி -

க்ரூட் ஆயில் இன்ஜின்களும் தயாரில்
இருக்கின்றன.

MASSEY & Co. Ltd.
ENGINEERS

மாசி அண்ட் கம்பெனி, Ltd.
திருச்சி ரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட்
கோயமுத்தூர்.

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னாடிஸ மெஸ்மரிஸ மென்னும்

மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வயப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, ஜுலை போஸ்டு, மதராஸ்,

டிடக்டாஸ்
அல்லது
துப்பு இரகசியம்
அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன் மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஒரு கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றி வேண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

... எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக்
விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று



அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—5—0.

தி. பான்ஸி வாட்ச் அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

படிக்கப் படிக்க ஆனந்தம்! விகடப் பேச்சின் விநோதம்!!



# ஆனந்த விகடன்

மாதப் பத்திரிகையை

## ஆவலுடன் எதிர்பார்க்கிறார்!

தமிழ் மாதம் பிறந்துவிட்டால் தமிழ் நாட்டிலே ஆயிரக்கணக்கானவர் "ஆனந்த விகடன்" வருகிறதென்று தபாற்காரனையே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். "ஆனந்த விகடனை" எப்பொழுது தபால்காரன் கொண்டுவந்து கொடுப்பான், எப்பொழுது அதிலுள்ள விஷயங்களைப் படித்து ஆனந்திப்போம் என்று சதா இதே சிந்தனையாய் "ஆனந்த விகடன்" சந்தாதார்கள் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது சகஜமாயிருக்கிறது. அவர்களுடைய எண்ணம் நிறைவேறுமாறு அன்றைய தினம் தவறாமல் தபால்காரன் "ஆனந்த விகடனை" அவரிடம் கொண்டுவந்து கொடுக்கிறான். அதை அளவிலா ஆனந்தத்துடன் வாங்கி உடனே அதைப் பிரித்துப் படிக்கிறார்; சிரிக்கிறார்; தம் நண்பர்களுக்கெல்லாம் அதைப் படித்து காண்பிக்கிறார். ஊர் முழுவதும் அன்று ஆனந்தமயமாகவே இருக்கிறது. "ஆனந்த விகடனை"ப் படித்தால் நீங்கள் ஆனந்தமாயிருப்பீர்கள். உடனே சந்தாதாரராகச் சேருங்கள். தாமதிக்க வேண்டாம். இவ்வளவு குறைந்த சந்தாவுக்கு இதைவிட ருசிகரமான பத்திரிகையை நீங்கள் வேறெங்கும் காணமுடியாது.

இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருடசந்தா தபால்கூலி உள்பட ரூ. 1—0—0.
சிங்கப்பூர், பினங்கு, செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு முன்பணம் ரூ. 1—4—0.
மாதிரி காபி இனாம்!

**'ஆனந்த விகடன்' ஆபீஸ்,**
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.



வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

## லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாற்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

# வர்த்தகக்கணிதநூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டியது எவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியதெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் ஷை புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் ஷை புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ 2

**வாசன் புஸ்தகசாலை.** நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ. 119, சென்னை



## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணாமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.



## கணித சோதிடம்

பாசித கணிதப்படி கணிதஞ்செய்த பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று லகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும் உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.



## எதிர்கால சோதிடம்.

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினால் உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதர், பிதர், ஸந்தானம், சத்ரு, ருணம், களத்திரம், களத்திர ரூபம், பாக்கியம், ஜீவனம், தொழில், லாபம், விரையம் ஆக இத்யாதி விஷயங்கள் பூராவும் தெரிவிக்க ரூ: 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி நடக்கும் பலன் எழுத ரூ. 2. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

அருட்பிரகாசர் சோதிடாலயம்,
வைத்திக்குப்பம், புதுவை. (பிரஞ்சிந்தியா).

# உங்களுக்கு ஆலய உரிமை இல்லையா?

(ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீதவசாமியார் எழுதுவது)

உங்களை, நீங்கள் இந்துக்கள் என்று சொல்லிக்கொள்கின்றீர்கள். வாஸ்தவத்தில், நீங்கள் இந்துக்களென்று சொல்ல இந்து மதத்தில் உங்களுக்கு என்ன உரிமை யளிக்கப்பட்டிருக்கின்றது? இந்து மதத்தை நம்பியிருக்கும் நீங்கள் இந்துமதக் கடவுள்களை தரகர்களின்றி நேராக வணங்கும் உரிமை பெற்றிருக்கின்றீர்களா? இந்துமதக் கோவில்களில் உள்ள கடவுள்களின் சமீபத்தில் செல்ல பாத்தியத்தையற்ற நீங்கள், "நான் ஒரு இந்து" என்று சொல்லிக் கொள்வது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றவில்லையா? இந்து மதத்தை அவலம்பித்திருக்கும் நீங்கள், உங்கள் குறைகளை இறைவனிடம் நேராக முறையிடும் உரிமை பெறவில்லையென்றால், இந்து மதத்தை நம்பியிருக்கும் நீங்கள் மோக்ஷமடைவதெங்ஙனம்? வடதேசத்தில், காசி, பண்டரி, ஜகந்நாத் முதலான இடங்களில் இந்துக்களென்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் கோயில்களில் நுழையவும், கடவுளைக் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்யவும், தங்கள் குறைகளை அவரிடம் முறையிடவும் அவரிடம், ஜல கந்த புஷ்ப தூப தீபங்களால் ஆராதிக்கவும் உரிமை பெற்றிருக்கும்போது, தென்னாட்டிலுள்ள இந்துக்களாகிய நாம் கோவில்களில் நுழைந்து இறைவனை ஆராதிக்கக்கூடாதென்று உயர்ந்த ஜாதியினரென்று கூறும் சிலர் கூக்குரலிடுகின்றனர். இவ்வண்ணம் இவர்கள் சொல்ல எவ்வித ஆதாரமும் இல்லை. கடவுளை ஆராதிக்க கோவில்களில் ஒவ்வொரு இந்துவுக்கும் உரிமையுண்டு. கடவுளை குறிப்பிட்ட சிலரைத் தவிர மற்றையோர் பூஜிக்கக் கூடாதென்று எந்த உண்மை சாஸ்திரங்களிலும் கூறவில்லை. இந்துமதம் நிலைபெறவேண்டுமானால், எல்லோர்க்கும் கோவில்களில் நுழையவும், கடவுளை ஆராதிக்கவும் சமாவகாசம் அளிக்கப் படவேண்டும். உயர்ந்தோர்கள் என்று கூறிக்கொள்வோர் இதற்கு இடம் தரவேண்டும். இல்லையேல், இவர்கள் மதம் நியாயமான உண்மையான மதமென்று யார்தான் சொல்லமுடியும்? இந்து மதத்தை நம்பியிருப்பவர்களுக்கு மதத்தில் எவ்வித சுதந்தரமும் கொடுக்கப்படாமல் உயர்ந்தோர்கள் என்பவர்களால் நசுக்குண்டு ஆயிரக்கணக்கான இந்து ஜனங்கள் அன்னிய மதங்களுக்கு நாடோறும் சென்றுகொண்டிருப்பதை இவர்கள் கவனிக்க வேண்டும்: குளம், கிணறு முதலான ஜடபதார்த்தங்களை இந்துமத மந்திர புண்யாகசனங்களினால் சுத்தி செய்து வருகின்றார்களே! ஜடபதார்த்தங்கள் சுத்தியடையும்பொழுது ஜீவனும், சைதன்யமும், பகுத்தறிவுமுள்ள சில மக்களை தாழ்ந்தவர்களென்று சொல்லி அன்னிய மதத்தார்க்கு ஏன் முடிக்கிவிடுகிறார்கள்? இந்துமத மந்திரங்கட்கு இவர்களை சுத்தி செய்யும் சக்தி இல்லாமல் போய்விட்டதா? சமீபத்தில் கிறிஸ்து மதத்தில் பிறந்த ஒரு அமெரிக்க மாது [மிஸ் மில்லர்] இந்து மதத்திற்கு மாற்றப்பட்டு சர்மிஷ்டா தேவியாகச் செய்யும் சக்தி வாய்ந்த சுத்திமந்திரங்களும், பம்பாயில் சுமார் 4000 தாழ்த்தப்பட்டவர்களை உயர்ந்தவர்களாகச் செய்யும் சுத்தி மந்திரங்களும், இந்து மதத்திலிருக்க இந்து மதத்தில் ஜனித்து இம்மதத்தையே நம்பியிருப்பவர்களுக்கு தென்னாட்டில் கோவிலுக்குள் நுழையவும், கடவுளை பூஜிக்கவும் செய்யும்படியாகச் செய்ய ஒரு சுத்தி மந்திரம் இல்லாமல் போனதுதான் ஆச்சரியமாயிருக்கிறது! அன்னிய மதத்தினர்களுக்கு கொடுக்கும் மதிப்புக்கூட இந்து மதத்தை நம்பியிருப்பவர்களுக்கு இல்லை போலும்! இந்து மதத்தில் பிறந்தவர்கள் இந்து கோவில்களுக்குள் நுழைந்தால், சுவாமியைத் தொட்டால், பூசித்தால், சுவாமி ஓட்டம் பிடித்துவிடுவாரா? சுவாமிக்குத் தீட்டு வந்துவிடுமா? அல்லது சுவாமி செத்துப்போய்விடுமா? அப்படி ஒன்றும் இல்லையே! இந்து சாஸ்திரங்கள் அவ்வண்ணம் ஒன்றும் சொல்லவில்லையே!

கணேச கீதை சுலோகம்:— 1.

பஜன் பக்தியா விஹீநோய சண்டாலோபி நீய தே—சண்டாலோபி பஜன் பக்தியாபிராமணே ப்யோதி கோமம.

கருத்து.—யாவனொருவன் என்னை [கடவுளை] பக்தியின்றிப் பூசிக்கிறானோ அவன் சண்டாளனாவான். சண்டாளன் என்று சொல்லப்படுவோனாயினும் என்னை (கடவுளை) பக்தியுடன் பூசிக்கலாம். பிராம்மணனைவிட அவன் எனக்கு இஷ்டமானவன்.

சிவ கீதை சுலோகம்:— 2.

பகுனா கிமுக்தேன யஸ்ய பக்தி சிவார்ச்சனே ஸ்வாத்ராதி காரீ ஸ்யாத் நாந்ய சித்த: சதாஜன

கருத்து:— என் அதிகம் சொல்ல வேண்டும். யாவனொருவனுக்கு கடவுளைப் பூசிக்க இஷ்டமிருக்கின்றதோ, அவன் கடவுளைப் பூசை செய்ய உரிமையுடையவனாகின்றான். பூசை செய்ய இஷ்டமில்லாதவன் அதற்கு அதிகாரியல்ல.

பகவத் கீதை சுலோகம்:— 3.

ஏ பஜந்திது மாம்பக்தியா மயிதேதேஷு சாப்யஹம்.

கருத்து:—யாவனொருவன் என்னை (கடவுளை) பக்தியுடன் பூஜிக்கின்றானோ அவனிடம் நான் இருக்கின்றேன். என்னிடம் அவன் இருக்கின்றான்.

பகவத் கீதை சுலோகம்:— 4.

சமோகம் சர்வேஷு திஷ்டந்தம் பரமேசுவரம்.

கருத்து:—நான் எல்லா மக்களிடத்தும் சமத்துவமாயிருக்கின்றேன். கடவுள் முன் உயர்வு தாழ்வு இல்லை.

நேயர்களே! முன் கூறியுள்ள பிரபல சுருதிகளின் கருத்தை உன்னிப்பாருங்கள். கடவுள் எல்லோரிடத்திலும் சமத்துவமாயிருக்கின்றார் என்றும், அவரைப் பூஜிக்க எல்லோருக்கும் உரிமை உண்டென்றும், இந்து மத சுருதிகளில் சொல்லியிருக்க, உயர்ந்தவர்களென்று சொல்லிக் கொள்பவர்கள், இவர்களின் சாஸ்திரங்கட்கு விரோதமாக இவர்கள் மதத்தை நம்பியிருப்பவர்களை கோவிலுக்குள் நுழையவும், கடவுளருகில் போகவும் கூடாதென்று சொல்வது இவர்கள் மதத்திற்கே பெரிய அவமானத்தை உண்டுபண்ணா வில்லையா?

உலகம் போற்றும் உத்தம 'பாரதமகாத்மா காந்தி'யடிகளையும், பாஞ்சால வீரரும் தேசபக்தரும் 'தியாக புருஷருமாகிய லாலாஜி' அவர்களையும், கோவிலுக்குள் போகக் கூடாதென்று தடுத்தார்கள். இதைவிட அநியாயம் வேறு யாதாவதுண்டாவென்று யோசித்துப் பாருங்கள். இப்பொழுது திருச்சி மலைக்கோட்டையில் சுவாமி தரிசனத்திற்காகச் சென்ற பக்தர்களாகிய ஸ்ரீமான்கள் ஜெ. என். ராமநாதன், ஜெ. எஸ். கண்ணப்பர், என். தண்டபாணி பிள்ளை முதலான உத்தமர்களும் கோவிலுக்குள் புக விடாமல் தடுக்கப்பட்டார்கள். கோவில் கதவுகளும் அடைக்கப் பட்டன. இந்து மதத்தில் இத்தகைய கொடுமைகள் நிகழ்வதால் இம் மதத்திற்கே அழிவுகாலம் நெருங்கிவிட்டதென்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஆலயங்களும், கடவுள்களும் ஒருவருக்கோ, ஒரு கூட்டத்தார்களுக்கோ, சொந்தமானதா? அன்று, அது எல்லோருக்கும் பொதுவானது. எல்லோருக்கும் பொதுவாயிருப்பதை சிலர் தங்களுக்கே உரிய சொந்தம் பாராட்டுவதும் கலகத்தை விளைவிப்பதும், அக்கிரமும், நியாய விரோதமும், அறநெறியை பாழ்படுத்துவதுமாகும். ஆகவே உயர்ந்தவர்கள் என்று சொல்லுவோர் தங்கள் மதத்தை நம்பியிருப்பவர்களுக்கு கோவில்களில் நுழையவும், கடவுளை பூஜிக்கவும் சம உரிமையை அளிக்கவேண்டும். இல்லாதவரையில் நியாயமான முறையில் சத்தியாக்கிரகப்போர் தொடங்கவேண்டும். அதன் மூலம் நமது உரிமையை நிலைநாட்டவேண்டும். இரண்டிலொன்று செய்யாமலிருக்கும் காலபரியந்தம் நம்மை நாம் இந்துக்களென்றாவது, சைவர்கள் என்றாவது, வைஷ்ணவர்களென்றாவது சொல்லிக்கொள்வது, எவ்வகையிலும் பொருத்தமில்லாததும் அர்த்தமற்றதும் வெட்கரமானதுமாகும்.

## தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை மகாநாடுகளும் பொருட்காக்ஷியும்.

**திருவாரூரில் 1928-ஞு ஜூலை-மீ 28, 29**

**சனி ஞாயிறு இருதினங்களிலும் மிக விமரிசையாய் நடைபெறும்.**

அகில உலகின்கண்ணுள்ள மக்கள் யாவரும் பகுத்தறிவென்பதை சரியான வழியில் உபயோகித்து சகல துறையிலும் சமத்துவம் பெற்று சுயமரியாதையுடன் வாழ்ந்து சுகம் பெற்றுவரும் இந்நாளில், ஏன்? நம் நாட்டினர் மாத்திரம் ஜாதி என்றும், சமயமென்றும், சொல்லி மக்களுக்குள் உயர்வு தாழ்வைக் கற்பித்துக்கொண்டு ஜீவாதாரமான சுயமரியாதையையும் இழந்து சம உரிமையு மற்று அன்னியருக்கும் அடிமையாய் அல்லற்பட்டு வருகிறோம். அதிலும் இந்த இடுக்கண்களுக்கு முழுதும் ஆளாகி அவஸ்தைப்படுவதில் பெரும்பாலார் பார்ப்பனரல்லாதவர்களாகவே இருந்துவருகின்றனர். இதனை நன்குணர்ந்தே நமது மாபெருந்தலைவர்கள் இவர்களின் விடுதலைக்கென தனி இயக்கம் கண்டு உழைத்து வருகிறார்கள்.

இந்த உத்தம இயக்கத்தின் தத்துவத்தை நாம் யாவரும் நன்குணர்ந்து வாழ்க்கையை நடத்தி நன்மையைப் பெறவே இதுபோது திருவாரூரின்கண் தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதாரின் 7-வது மகாநாடும், சுயமரியாதை முதலாவது மகாநாடும், தொண்டர் மகாநாடும் கூடப்போகிறது. அதனையேற்றவேண்டியதற்கு உதவி புரிய வேண்டியது அன்பர்களின் முதற்கடமையாகும். இதனையொட்டி பொருட் கண்காக்ஷியொன்று நடைபெறப்போவதால், அதில் சாமான்களை வைத்து பரிசுபெற விரும்புவோரும், மகாநாட்டுக்கான தீர்மானங்கள் அனுப்புவோரும், மற்ற மகாநாடு சம்மந்தமாய் உதவிசெய்ய விரும்புவோரும் ஒரு வாரம் முன்னதாகவே தங்கள் கடமையை செய்து தருவார்களாக! மற்றைய விபரம் விரும்புவோர் கீழ்கண்ட விலாசத்திற்கெழுதி தெரிந்து கொள்ளலாம்.

வரவேற்பு கட்டணம் ரூ. 5 — பிரதிநிதி ரூ. 2
பார்வையாளர் அணா 4 — கண்காக்ஷி அணா 1.

பெண்பாலர்களும், தாழ்த்தப்பட்டவர் பிரதிநிதிகளும் இனாமாய் அனுமதிக்கப்படுவார்கள். கண்காக்ஷி கட்டணமுண்டு. மகாநாட்டில் கலந்து தொண்டுசெய்ய விரும்பும் தொண்டர்கள் முன்னதாகவே தெரிவித்துவிடவேண்டும்.

வரவேற்புக்கழகத் தலைவர்கள், பிரதிநிதிகள் தலைவர்கள், தொண்டர்கள், முதலியவர்களுக்கு மாத்திரம் சாப்பாடு ஏற்பாடாகியிருக்கிறது. மற்றவர்களின் சௌகரியத்தை முன்னிட்டு மகாநாட்டு பந்தலுக்கருகாமையில் பார்ப்பனரல்லாதார்களைக்கொண்டு சுயமரியாதை உண்டிச்சாலை ஒன்று திறந்து வைக்கப்படும்.

காரியதரிசிகள், வரவேற்புக் கழகம்
திருவாரூர்.

# துருக்கியின் தற்கால நிலைமை.

## மதகுருக்களின் வீழ்ச்சி.

ஸ்ரீ சர்தார் இக்பால் அலிஷா அவுட்லுக் பத்திரிகையில் எழுதுவதாவது.—

துருக்கியில் மதம் அரசாங்க நிர்வாகத்தினின்றும் வேறு பிரிக்கப்பட்டதானது இஸ்லாம் உலகத்தையே பிரமிக்கச்செய்துவிட்டது. அங்கு செய்யப்பட்ட உள்நாட்டு சீர்திருத்தங்களோ கிறிஸ்து மதம் பரவியுள்ள மேல் நாடுகள் ஆச்சரியப்படும்படி மற்றொருபக்கம் செய்துவிட்டது. இவ்விரு இயக்கங்களும் துருக்கி சரித்திரத்திலேயே மிகவும் முக்கியமானவைகளாகும்.

இஸ்லாம் மதம் வீரத்தையும், பரிசுத்தத்தையுமே போதிப்பதால் துருக்கியர்கள் ஆதியில் போர்வீரர்களாகமட்டும் இருந்துவந்திருப்பது மூஸ்லீம் சரித்திரத்தைப் படித்துப் பார்ப்பவர்களுக்குத் தெரியவரும். அம்மதம், நூதன எண்ணங்களையும், முறைகளையும் அனுஷ்டிக்க இடமளிக்கவில்லை. முதலில் துருக்கியர்கள் கலிபாக்களுக்கு அடிமையாகவேயிருந்தனர். ஆனால் கூடிய சீக்கிரம் அவர்கள் இஸ்லாம் மதத்துக்கே தலைவர்களாக வந்துவிட்டார்கள். அதனால் இஸ்லாம் உலகம் முழுவதும் எக்காரியத்திலும் துருக்கியின் அநுமதியையும் அங்கீகாரத்தையும் பெறும்படியாயிற்று. துருக்கி சேனைத் தலைவர், இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுகிறவர்க்கெல்லாம் இரட்சகரானார், துருக்கி வம்சத்தைச் சேர்ந்த மதகுருக்கள் இஸ்லாம் உலகத்தில் செய்குல்இஸ்லாமாய் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் முஸ்லீம்களினிடையே மிகுந்த செல்வாக்குடனும் அதிகாரத்துடனும் விளங்கினார்கள்.

## குருமார்களின் ஆட்சி.

ஏதேச்சாதிகாரம் செலுத்திய துருக்கி சுல்தான்கள் தங்களுடைய அதிகாரத்தையும் கௌரவத்தையும் மதகுருக்களின் உதவியைக் கொண்டும் மதகுருக்கள் தங்களுடைய பிடிப்பை பாமர ஜனங்களின் உதவியைக் கொண்டும் பலப்படுத்திக் கொண்டார்கள். அதனால் சுல்தான்களும், குருமார்களும் பரஸ்பரம் ஆதரித்து வந்தார்கள். இவ்விதம் வெகுகாலம் வரை அவர்கள் நடத்திவந்தார்கள். திடீரென மதகுருக்கள் இஸ்லாம் மதத்தில் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலையும் தடை செய்துவர ஆரம்பித்தார்கள். மத ஆராய்ச்சி செய்யவேண்டுமென்ற சுபாவம் துருக்கியர்களுக்கு அக்காலத்தில் ஏற்படாததால் அவர்கள் தங்களுடைய அறியாமையினால் "அல்லா" வென்ற பதத்துக்கு மதகுருக்கள்கூறிய அர்த்தத்தையே நம்பியிருந்தார்கள். மேலும், அக்குருக்கள், தங்களுக்குள்ள அதிகாரத்தை எவரும் ஆக்ஷேபிக்க முடியாதென்றும், நாட்டுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்த காலத்திலும் கூட தங்களுடைய உதவியின்றி சுல்தான்கள் ஏதும் செய்ய முடியாதென்றும், ஒருவருக்குப் பட்டஞ்சூட்டவும், ஒருவரை சிம்மாசனத்திலிருந்து நீக்கவும் தங்களுக்கே அதிகாரம் உண்டென்றும் போதிக்கத் தொடங்கினார்கள். காலாரம்பத்தில் தேசம் அவர்களுடைய ராஜ்யமாகப் போய்விட்டது. ஏனெனில் பாமர ஜனங்களோ அறியாமையில் மூழ்கிக்கிடந்தனர். சுல்தான்கள் பலமிழந்து விட்டனர். மத குருக்கள் தங்களுடைய உத்தரவை மீறி நடப்பவர்களை நாட்டை விட்டும் ஓட்டி வந்தனர். அதனால் குருக்களின் அதிகாரம் அளவு கடந்து விட்டது. தேச முன்னேற்றம் தடைப்படலாயிற்று. தேச நிர்வாகத்தில் ஊழல்கள் முளைத்தன. மூடக்கொள்கைகள் தலைவிரித்தாடின. நவீன துருக்கியில் ஜனங்கள் கொடுமைப்படுத்தப் பட்டார்களென்றால், நிர்வாக ஊழல்கள் மிகுந்திருந்தன வென்றால், அதை சுல்தான்களின் திறமைக்குறைவென்று மட்டும் சொல்லமுடியாது. ஏனென்றால் அவர்கள் உண்மையில் குருமார்களுக்கு அடிமைப்பட்டிருந்தார்கள். பிந்தினவர்களுக்கு நிர்வாகத் திறமையோ சூன்யம். மேலும் மத உண்மைகளை மொழி பெயர்த்துக்கூற யாருக்கும் அதிகாரமுண்டென்று மகமது கூறியிருந்தும் குருமார்கள் தங்களுக்குச் சாதகமாயிருக்கும் படியான பொருள்களையே கூறி வந்தார்கள். வேதத்திலாவது, மகமது நபி கூறியிருப்பதிலாவது தங்களுடைய பொருளுக்கு மாறான விஷயங்களடங்கி யிருக்குமானால் அவற்றை நம்பக்கூடாதென்றும் உத்திரவிடப்பட்டது. ஆகவே, வேதத்தைவிட தாங்கள் கூறுவதையே பின்பற்ற வேண்டுமென்று இவர்கள் வலியுறுத்தினார்கள். அவற்றைமீறி நடந்தவர்கள் அடிக்கடி தண்டனையடைந்தும் வந்தார்கள்.

## கமால் பாஷாவும் உலமாக்களும்.

இச்சமயத்தில் காஜி முஸ்தாபா கமால் பாஷா அனடோலியாவில் தேசியத்துருப்புகளை தயாரித்த போது உலமாக்கள் அவர்கள் இஸ்லாம் மதத்தின் விரோதிகளென்றும் அவர்களை நாட்டைவிட்டுத் துரத்த வேண்டுமென்றும் கூறினார்கள். துருக்கியின் கடைசி கலிபாவுக்கும் அங்கோரா கவர்ன்மெண்டுக்கும் நடந்த யுத்தமும் சமீபத்தில் குர்திஷில் நடந்த கிளர்ச்சியுமே கான்ஸ்டாண்டிநோபிலிலுள்ள வெள்ளை தலைப்பாகைகளையுடைய குருமார்களின் வீழ்ச்சிக்குக் காரணமாகும். தேசீய கவர்ன்மெண்டார் குர்திஷ் யுத்தத்தில் தோல்வியடைந்ததை மனதில் கொண்டு தேச முன்னேற்றத்துக்கும், துருக்கியை ஒருதேசமாகக் கருதப்படுவதற்கும் தடையாகயிருந்து வந்த பாழும் குருமார்களின் ஆதிக்கத்தை அடியோடு ஒழித்து விடுவதுதான் சரியான மார்க்கமென்று கருதினார்கள். தங்களுடைய சுயநலம் கருதி சுல்தான்களும், குருமார்களும், சில காலம் தனித்தனியே தேசிய கவர்மெண்டுடனும் மற்றும் சில காலம் கூட்டுறவாகவுமிருந்து தங்களுடைய காரியத்தைப் பூர்த்தி செய்து வந்தார்கள். ஆனால் கமால் பாஷா மட்டும் இதற்கெல்லாம் இடம் கொடுக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் தேச முன்னேற்றத்துக்கு விரோதிகளாயிருப்பதை அவர் அறிந்தார்.

நிலைமையை உண்மையாக ஆராய்ச்சி செய்யுமிடத்து, துருக்கியில், இஸ்லாமுக்கு விரோதமாக உள் நாட்டு கலகம் கிளம்பவில்லையென்றும், ஆனால் உலமாக்களின் சூழ்ச்சிகளையெல்லாம் உடைத்தெறிந்து இஸ்லாம் மதத்தைப் பழைய நிலைமைக்கு கொண்டுவர ஏற்பட்டதேயாகும். உலமாக்களின் சூழ்ச்சிக்கு இன்னும் இடம் கொடுக்கப்படுமானால் அவர்கள் தேசியமென்னும் பூண்டையே அடியோடு தொலைத்துவிடுவார்கள். உண்மையான இஸ்லாம் மதத்தை அனடோலியாவில் காணலாம். அங்கோராவிலிருந்து ஒருவர் சிறிது தூரம் செல்வாரானால், அங்கு உண்மையான இஸ்லாம் எல்லா மகிமைகளுடனும் விளங்குவதைக் காணலாம். அது புது துருக்கிக்கு ஹிருதயம்போன்ற கோனியாவில், சாதாரண விவசாயிகள், ஹோட்டல் காரர்கள் முதலியோர்களின் முகத்தில் சிறந்து விளங்குவது தெரியவரும். அங்கு அசுத்தமுள்ளவர்களையும், சண்டையிட்டுக் கொள்பவர்களையும், குடிவெறியுள்ளவர்களையும் காண முடியாது. சிறுவர்களையும் வயோதிகர்களையும் அறியாமையில் ஆழ்த்திவந்த மூலக்கொள்கைகளெல்லாம் துருக்கியில் இப்போது மலையேறிவிட்டன. அங்கோராவிலுள்ள ஒவ்வொருவனிடத்திலும் தேசிய உணர்ச்சியானது ததும்பி நிற்கின்றது. மதத்திலுள்ள குருட்டு நம்பிக்கைகளையும், குருமார்களின் ஆட்சியையும் ஒழித்தபின்னர், துருக்கியர்கள் முன்பு கிரீக்கர்களை ஜெயித்தபோது ஏற்பட்டிருந்ததைவிட எத்தனையோ மடங்கு அதிகமான சுதந்திரத்தை அடைந்திருப்பதாகக்கருதுகின்றனர். தேசீயமே அவர்களுடைய இயக்கத்தின் முக்கிய கொள்கை. இன்று அவர்கள் மதபிரசங்கங்களுக்குச்செவி சாய்ப்பதேயில்லை. அனைவரும் தங்களுடைய தலைவராகிய கமால்பாஷாவைப் பின்பற்றி நடக்கின்றனர்.

நான் ஒருநாள் அங்கோராவின் வீதி ஒன்றிலுள்ள ஒரு வீட்டில் உட்கார்ந்திருக்கும்போது வெகுதூரத்தில் ஜனங்கள் கைதட்டி ஆரவாரம் செய்வதும் குதிரைகளின் காலடி சத்தமும் எனக்குக்கேட்டது. என்னவென்று கவனிக்கையில் கமால்பாஷா சேனைகளைப் பார்வையிட வந்து கொண்டிருக்கிறார் எனத்தெரியவந்தது. அந்த சத்தத்தைக்கேட்டு வீட்டிலுள்ள ஆண் பெண்கள், ஆசியாவின் நெப்போலியனைக்காணும்பொருட்டு அங்கு ஓடிவந்தார்கள். வீட்டுமாடிகள், முற்றம், ஜன்னல்கள், தெருக்கள், ஆகிய எங்கும் ஜனங்களின் தலைகளே தோன்றின. ஒரு பெரிய மோட்டார் வண்டி மலையிலிருந்து ஆக்லந்து தெருவழியாக துள்ளித்துள்ளி வந்து கொண்டிருந்தது. அதில் உட்கார்ந்தவர் கமால் பாஷா அவர் துப்புரவாக முகக்ஷவரம் செய்திருந்ததுடன் ஐரோப்பியர்போல் உடைதரித்திருந்தார். ஜனங்களுக்குத் திரும்பிமரியாதைசெய்யும் பாவனையாக அவர் தம்முடைய தலையை அசைத்துக்கொண்டே சென்றார். ஜனங்கள் தங்களுடைய உணர்ச்சியை அடக்கமுடியாதவர்களாகி கை தட்டியும், துணிகளை வீசியும் தங்களுடைய தலைவரைப் புகழ்ந்தார்கள். "இவரே எங்களுக்கு ரக்ஷகர், தலைவர்" என உறக்கக்கத்தினார்கள் எனக்கு அருகில்நின்ற ஒருவர் "அல்லா அவனைக் காப்பாற்றுவாராக" என்று இறைஞ்சி அவர் தம்முடைய மூன்றுவயது குழந்தையை தலைக்குமேல் தூக்கி துருக்கி குடியாட்சித்தலைவரைக்காட்டினார். எனது வாழ்நாளில் எங்கும் காணாத தலைவர் வணக்கத்தை நான் அங்கு கண்டேன்.

'திராவிடன்.'

# மதிப்புரை

பரம இச்சாஞான தீபிகை எனும் காரிய சித்தாந்தம் என்கிற ஒரு புத்தகம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. இது ஞானியார் ஸ்வீடன் பர்க் என்பவர் லத்தீன் பாஷையில் எழுதிய "வெளிப்படுத்தின விசேஷ விளக்கம்" என்னும் நூலிலிருந்து எடுத்த பரம இச்சாசக்தி, பரம ஞான சக்தி என்னும் நூலை 'நியூ ரிபார்மர்' மாஜி பத்திராதிபர் திரு. டி. கோபால செட்டியாரவர்களால் செய்யப்பட்ட தமிழ் மொழி பெயர்ப்பு.

இது கிறிஸ்தவ நூல்களை அனுசரித்துச் செய்யப்பட்டதாயினும் பொதுமக்களுக்கு உபயோகப்படத்தக்க பல விஷயங்களைக் கொண்டுள்ளது. இது 200 பக்கம்கொண்ட புத்தகம். விலைரூபாய் ஒன்று. கிடைக்குமிடம், டி. கோபால் செட்டியார், 'நியூ ரிபார்மர்' மாஜி பத்திராதிபர், ராயபேட்டை, சென்னை.

பார்ப்பனீயம் ஒழிய,
சுயமரியாதை அடைய
'திராவிடன்' 'குடி அரசு'
பத்திரிகைகளை வாசியுங்கள்.

## அவர்கள் என்ன பேசுகிறார்கள்.

(திரு. அய்யாமுத்து எழுதுகிறார்)

தற்கால கல்வி அறிவு படையாத சில வைதீகப்புடுங்கல்களும், கட்டுக் கதைகளான புராண இதிகாசங்களால் வயிறு வளர்க்கும் பார்ப்பனர்களும், அவர்கள் மறைவில் தங்கள் சாண் வயிற்றுக்காக தங்கள் சகலத்தையும் துறந்து திறந்து விடக் காத்துக் கொண்டிருக்கும் பத்திரிகைகளும், பத்திரிகாசிரியர்களும் மழையடி காலத்து காளான்கள் முளைப்பதுபோல மினுக்குமினுக்கெனத் தோன்றி "நாயக்கர் பேச்சு விஷமம், நாஸ்திகம், துவேஷணை, சமூகப் பிணக்கு" என்று இணக்கமற்றுக் கத்துவதையும் வாசகர் அறிவர்,

* * *

ஹா! ஹா!! நாயக்கர் அவ்வளவு மகத்தானவரா? கல்வியறிவு பெற்றவரா? வேத பாராயணம் செய்தவரா? வேதார்த்தம் அறிந்தவரா! சித்தாந்தம் பெற்றவரா! அப்படியா? இப்படியாவென்று ஒரு சலசலப்புத் தமிழ் நாட்டிலும் தமிழ் நாடான தென்னாட்டிலும், நவநவமான சக்திகளோடு ஏற்பட்டிருக்கிறது. இந்தச்சலசலப்பு நாத்திகக் காற்றால் ஏற்பட்டதாயின் சொல்வதற்கொன்றுமில்லை. ஆத்திகக் காற்று ஓசையுடன் வீசுமிடங்களிலுண்டாவதால் சொல்லப் பலவுண்டு.

* * *

பரியை நரியாக்கின உங்களாண்டவர், கல்வியற்ற காளிதாசனை கல்வியாளனாக்கின உங்களாண்டவர், கல்லைப்பெண்ணாக்கிய உங்களாண்டவர், எங்கள் நாயக்கரை வேதாந்த பாஸ்கரராக்க இயலுமோ வியலாதோ? ஏன், நீங்கள் பூர்வ ஜன்மங்களிலும் மறு பிறப்புகளிலும் நம்பிக்கையுடையவராயிற்றே! கடந்த ஜன்மத்தில் நாயக்கர் பாண்டித்யம் அடைந்திருப்பின் அது இச்ஜென்மத்தில் பிரகாசிக்கும் என்ற நம்பிக்கை உமக்குண்டல்லவா? பிறக்கும் போதே ஒருவன் பாப்பானாயும், பிறக்கும்போதே மற்றொருவன் சண்டாளனாயும் பிறக்கிறான் என்ற வர்ணாசிரமிகள் பேசட்டும். ஏனையோர் கேளுங்கள்.

* * *

நேற்றுத் தென்னாட்டில் ஒரு அறிவிலி எழுதியிருக்கிறார். அதாவது, "நாயக்கர் எங்கும் ஒரே மாதிரி பேசுகிறார். ஒரேவிதத்தையே எங்கும் சொன்னார்" என்பதே. பற்பல இடங்களில் பற்பலவிதமாக சமயத்திற்கேற்றாற்போல் பேசி வயிறு வளர்க்கும் ஆசாமி நமது நாயக்கர் அல்லவென்பது இதனால் புலனாகவில்லையா? நாயக்கர் அநுபவஞானி, அபார சக்தி படைத்தவர். விஷயங்களை எளிதில் [illegible] உணர்ந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவர். பொது அறிவு நாயக்கரிடம் பிரகாசிப்பது போல் வேறெவரிடமும் தற்காலம் தென்னிந்தியாவில் பிரகாசிப்பதில்லை யென இங்கு எல்லோர்கள் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள்.

* *

தென்னாட்டில் மற்ற மந்த அறிவினர் கூறுவது 'நாயக்கருக்கு ஒன்றுந்தெரியாது. எல்லாம் மனப்பாடம்; கைவல்ய சாமியாரைக் காப்பியடித்தது' என்பதாகும். இத்தப்பேர்வழி நாயக்கரை நன்றாய் கவனித்துக் கேட்டிருக்கிறாராம். ஆனால் கைவல்யசாமியைப் படித்ததில்லைபோல் காணகிறது. காரணம் நாயக்கர் எண்ணும்போதும், எழுதும்போதும், பேசும்போதும், எப்போதும், எவ்விடத்தும், எந்தப்புராணங்களையும், இதிகாசங்களையும், வேதங்களையும் பெருமைப் படுத்துவதில்லை. அவைகளினின்று மேற்கோள் தேடியொளிவதில்லை "அவைகளினால் மனிதனறிவு மங்கிவிட்டது. மனிதன் தன்னைத்தான் அடிமையாக்கிக் கொண்டான். ஆகலால் அவைகளை ஒழிக்க வேண்டும்" என சதா முயற்சித்து வருகிறார்.

ஆனால், நமது அன்பிற்குரிய கைவல்யசாமியார் நாயக்கருக்கெதிராகவே அறிந்தோ அறியாமலோ எழுதி வருகிறார். எப்படியெனில், "தற்காலத்திலுள்ள பிராமணன் பிராமணனல்ல. பிராமண லக்ஷணம் இந்த ஸ்மிருதியில் இப்படிச் சொல்லியிருக்கிறது. அந்தப்பாகத்தில் அப்படிக்கூறியிருக்கிறது. இப்படிக்கூறியிருக்கிறது." என்று சாமியார் எழுதி வருவதால் என்ன ஏற்படுகிறது? எந்தெந்த நிபந்தனைகளையும் கோட்பாடுகளையும், நாயக்கர் ஒழிக்க முயலுகிறாரோ, அதே நிபந்தனைகளுக்கும், கோட்பாடுகளுக்கும், ஆதாரமாக நமது பேரன்பிற்குரிய கைவல்யசாமிகள் "அதற்கு ஆதாரம் இதப்புஸ்தகம்; இப்போது இருக்கும் கோட்பாடு தப்பு; சரியானதற்கு ஆதாரம் இன்னின்ன சாஸ்திரம்" என்றியம்புவதால் மக்கள் மனதில் புராண இதிகாச வேத சுருதிகளின் பெருமை படிந்தொழுமாறு முயற்சிசெய்கிறார். என்பதே.

ஆதலால் நாயக்கருக்கும் கைவல்ய சாமியாருக்கும் சமுத்திரமளவு வித்தியாசமிருக்க, நாயக்கருக்குக் கைவல்ய சாமியை காப்பியடிக்கும் பட்டமும் கைவல்ய சாமியாருக்கு ஜன சமூகத்தைப் பாழ்படுத்தும் பட்டமும் சூட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் பேசுவது இம்மட்டோ! அடுத்த முறை தொடர்ந்து கூறுவோம்.

## ஆடி அமாவாசையும் பார்ப்பனர்களின் அக்கிரமமும்.

அயோக்கிய பார்ப்பனர்களின் வரும்படி தினமாகிய ஆடி அமாவாசையன்று இவ்வூருக்கு அடுத்துள்ள வேதாரண்யத்திற்கு வழக்கம்போல் கடலில் ஸ்நானஞ்செய்ய பல ஊர்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான ஜனங்கள்வந்து குழுமினார்கள். ஸ்நானதினமாகிய திங்கட்கிழமை காலை 4-30 மணிக்கெல்லாம், மோட்சலோக தரகர்களாகிய பார்ப்பனர்கள் மோட்சலோக நூலேணியை (தர்ப்பைப்புல்லை) கட்டுக்கட்டாகக் கொண்டுவந்து வரிசையாக உட்கார்ந்துக்கொண்டு "ஐயா" இங்கேவாருங்கள், நான் ஒழுங்காய் மந்திரம் செய்கிறேன்; தர்ப்பணம் செய்கிறேன்" என்று ஸ்நானஞ்செய்யப்போகிறவர்களை யெல்லாம் மடியைப்பிடித்து இழுத்து வம்புசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

இவர்கள் சத்தம் கடலொலியைவிட அதிகமென்னலாம். இவ்வாறு பல தந்திரங்கள் செய்து "அதற்கு இரண்டணா, இதற்கு நாலணா" என்று ஜனங்களின் பணத்தை கொள்ளை அடித்துக்கொண்டு விட்டதோடு தக்ஷணை கொடுக்காதவர்களை நோக்கி திட்டவும் ஆரம்பித்துவிட்டார்கள். என்னே இவ்வயோக்கிய பார்ப்பனரின் அக்கிரமம்! எத்தனையோ பார்ப்பனர்கள் சோம்பேறிகளாய் நம்மவர்களால் ஏற்படுத்தப்பட்ட சத்திரங்களிலும் மடங்களிலும் சோற்றைத் தின்றுகொண்டு மோக்ஷலோகத்திற்கு வழிதெரியாமல் அலைகிறார்களே! அவர்களை, மந்திரப்பார்ப்பனர்கள் தங்கள் மந்திரபலத்தால் சத்திரங்களுக்கும், மடங்களுக்கும் அலைந்து திண்டாடித் தெருவில் நிற்காமல் மோட்சலோகத்திற்கு ஏன் அனுப்பக்கூடாது என்று நான் கேட்கிறேன். சுயஜாதியாரை மோட்சத்திற்கனுப்பமுடியாத இப்பார்ப்பனர்கள் நம்மவர்களை மந்திரபலத்தால் மோட்சத்திற்கனுப்புவதெங்ஙனம்? காலையில் எழுந்தவுடன் முகங்கழுவாமலும், பல் தேய்க்காமலும் வாய்நிறைய வெற்றிலை பாக்கைப் போட்டுக்கொண்டு வாய்திறந்து பேசமுடியாத நிலைமையில் இப்பார்ப்பனர்கள் செய்யும் மந்திரங்கள் நமக்கு மோட்சலோகத்தை—புண்யலோகத்தைக் கொடுக்குமா என்பதை நமது பார்ப்பனரல்லாத சகோதர சகோதரிகளே, சற்று சிந்தித்துப்பார்க்கட்டும். பஞ்சமா பாதகங்களையும் கொஞ்சமும் அஞ்சாமல் செய்யத்துணியும் இருபிறப்பாளரான இப்பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப்பிழைப்புக்காக பல பொய்ப்புராணகுப்பைகளைக் கட்டிவைத்துக்கொண்டு தர்ப்பணம் என்றும், சிரார்த்தம் என்றும் அப்படிச்செய்தால் புண்யமென்றும், பலவழிகளால் நம்மவர்களை ஏமாற்றி நாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பொருள்களைக் கவர்ந்து கொண்டு தங்கள் வயிறு நிரம்பவும், தங்கள் பெண்ஜாதி பிள்ளைகளே சௌக்கியமாய் வாழவும், தங்கள் ஆதிக்கமே எல்லாவற்றிலும் மேலோங்கவும் வேண்டுமென்ற நோக்கத்தை உடைய அக்கிரமப் பார்ப்பனர்களின் வேதத்தில்—மந்திரத்தில்—சாஸ்திரத்தில்—புராணத்தில் கொஞ்சமும் நம்பிக்கை கொள்ளாதீர்கள். நமது காசு பார்ப்பனர்களின் கையில் எவ்வளவு ஏறுகிறதோ அவ்வளவுதான் நாமும் மோட்சலோக வழியில் செல்லமுடியுமென்றும், நாம் பணம் கொடுப்பது நின்றுவிட்டால் மோட்சலோகவழியும் அடைபட்டுப் போகிறது என்றும், சொல்லும் இத்தகைய அயோக்யத்தனமான—குறும்புத்தனமான பார்ப்பனர்களின் சூழ்ச்சியில் அகப்படாமல் தப்ப பாமரர்களுக்கும், பண்டிதர்களுக்கும் நமது 'குடி அரசு' பத்திரிகை பாடுபட்டுவருகிறது. ஆகையால் சகோதரர்களே நாம் பார்ப்பனரின் அக்கிரம சூழ்ச்சியினின்றும் விடுதலை அடையவேண்டுமானால்—பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டுமானால்—சுயமரியாதையை காப்பாற்றிக்கொள்ளவேண்டுமானால்—'குடி அரசு' பத்திரிகைதான் முக்கிய கருவியாகும், அதன் வாயிலாக வெளிவரும் வியாசங்கள்—கட்டுரைகள்—மனக்கவர்ச்சியை உண்டாக்கி நாம் சுயமரியாதையை அடையும் மார்க்கத்தை செவ்வனே யுணர்த்தி நம்மையும் நம் சந்ததியாரையும் வீரர்களாக்குமென்பதற்கெட்டுணையும் ஐயமின்று.

டி, கோபால்சாமி,

## மந்திரக் காரர்களுக்கும் மந்திராபிமானிகளுக்கும் ஓர் அறிவிப்பு.

உலகத்தில் மந்திரமென்பதேயில்லை என்றும் பார்ப்பனர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்படுத்தியுள்ள காரியங்களில் இதுவும் ஒன்றென்றும் சொல்வதோடு மாரணவேலையோ அல்லது மோ[illegible] அல்லது குட்டிச்சாத்தான் வேலையோ எதுவாகிலும் சில நிபந்தனையின்பேரில் நடத்திக்காட்டட்டும் என்றும் மந்திரமென்பதே தெரியாத ஒரு நண்பர் சுமார் 10-வருஷ காலமாக சமயம் வந்தபோதெல்லாம் சொல்வதுண்டு. அதை இப்பொழுது நேரில் ஒன்று பார்த்துவிடவேண்டும் என்று முயற்சித்திருப்பதினால் மந்திரக் காரர்களும் மந்திராபிமானிகளும் தடையின்றி இதை நடத்தவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இஷ்டமுள்ளவர்கள் நிபந்தனைகள் இன்னின்ன வென்பதையும் இன்ன நாள் என்பன முதலிய முழு விபரங்களையும் கீழ்கண்ட விலாசத்திற்குக் கடிதமெழுதித் தெரிந்து கொள்ளலாம்

விலாசம்:
தோ. அ. வி. ஏகாம்பர பண்டாரம்,
தாதகாபட்டி ரோட்ஸ்ட்ரீட்
சஞ்சீவிராயன் பேட்டை, சேலம்.

## இவர்கள் பார்ப்பனரல்லாதார்களா?

சைமன் கமிஷன் பகிஷ்காரம் பார்ப்பனர்களின் சூழ்ச்சி என்று நாம் பலமுறை எழுதியிருந்தோம். நம் வைக்கம் வீரர் அதைத்தான் சொல்லி வருகின்றார். பம்பாய் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் தலைமைவகித்த ராவ்பகதூர் கே. எஸ். நாயுடு அவர்களும் 'சைமன் கமிஷனைப் பகிஷ்காரம்செய்யவேண்டுமென்று கூக்குரல் இடுவோர்பார்ப்பனர்கள்தான்' என்றார். திரு. கே. எஸ். நாயுடு இவ்வாறு உண்மையை உள்ளவாறு எடுத்துக்கூறியது "பம்பாய் கிரானிக்கல்" பத்திரிகைக்கு வயிற்றெரிச்சலை உண்டாக்கி விட்டது. ஆகையால் அப்பத்திரிகை இப்பொழுது தென்னாட்டில் பகிஷ்காரப் பிரசாரம் செய்யும் திரு வரதராஜுலுநாயுடு, முத்துரங்கம் முதலியார், பஷீர்அகமது முதலியோர் பார்ப்பனரல்லாதார் அல்லவா என்ற கேள்வியைக் கேட்கின்றது. இதற்குநாம் என்னவிடை யிருப்பது? ஆம் இவர்கள்பார்ப்பனரல்லாதார்கள்தான்; ஆனால் இவர்கள் எத்தகைய பார்ப்பனரல்லாதார் என்பதேநம் கேள்வி. காமாலைக்காரன் கண்ணுக்குக் காண்பதெல்லாம் பச்சை யென்பது போல் "பம்பாய்கிரானிக்கில்" பத்திரிகைக்கு நாயுடு, முதலியார் என்ற பட்டப்பெயர் உடையவர்களெல்லாம் பார்ப்பனரல்லாதாராகத் தோன்றலாம். ஆனால் இவர்களுக்கு இம்மாகாணத்தில் என்னமதிப்பு இருக்கின்றது? இவர்களை பார்ப்பனரல்லாதார்என்று யாரேனும் கருதுகின்றார்களா? என்பது பாவம் கிரானிக்கில் பத்திரிகைக்கு ஒன்றும் தெரியாது. "கிரானிக்கல்" பத்திரிகை தன்பிரதிநிதி ஒருவரை அனுப்பிச் சென்னை மாகாணத்தில் அக்கிராகாரம் தவிர மற்றஇடங்களில் விசாரித்தால் மேற் கூறப்பட்டுள்ளவர்கள் பார்ப்பனரல்லாதார்களா என்பது வெட்டவெளிச்சமாகும். இவர்கள் பார்ப்பனதாசர்கள் என்ற உண்மை இம்மகாணத்திலுள்ள ஒரு சிறு பிள்ளைக்குக்கூட தெரியும். வேடர்கள் காட்டிலுள்ள யானைகளை குழிப்பறித்து ஏமாற்றிப் பிடிப்பதற்காக எப்படி பழக்கப்பட்ட யானைகளைத் தம் வயப்படுத்தி வைத்திருக்கிறார்களோ, அத்தன்மைத்தே மயிலைப்பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை வஞ்சிக்கும் பொருட்டு மேற் கூறப்பட்டுள்ள விபீஷணர்களைத் தம்மிடையே வைத்துக்கொண்டிருப்பது. திரு. முத்துரங்கம் முதலியார் ஒருகால் கோயமுத்தூர் திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் சொன்னது போன்று, பி. ஏ. பட்டம் மட்டும் பெற்றிருக்கலாம். இருந்தும் பார்ப்பனர்கள் எழுதிக்கொடுப்பதில் கையெழுத்துப் போடுபவர்; மற்றும் பார்ப்பனர்கள் சொல்லிக்கொடுப்பதை அப்படியே வாங்கி எடுப்பவர் என்பது யாவரும் அறிந்ததே. ஜனாப்பஷீர் அஹமதுவோ அவர்சைமன்கமிஷன்பகிஷ்காரத்தைப் பற்றி பேசுங்கால் ஈரோடு முசல்மான்கள்

"தொப்பியை எடுத்துவிட்டுப் பட்டை நாமம் போட்டுக்கொண்டு பூ ணூல் போட்டுக்கொள்ளும்"

என்று குறைகூறினார்கள் என்றால் ஜனாப்பஷீர் அகமதுக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கின்றதென்பதைப் பற்றி நாம் சொல்லவும் வேண்டுமோ! இனி திரு வரதராஜுலுவைப்பற்றி நாம் சொல்லவேண்டுவதே கிடையாது. அவரை ஐயங்கார்என்றே யாவரும் அழைப்பது; இந்நிலையில் "கிரானிக்கல்" மேற் கூறியவர்களைப் பார்ப்பனரல்லாதவர்களா இல்லையா என்றுகேட்பது அறியாமையாகும். காலஞ் சென்ற கனம்மாண்டேகு ஒரு முறை திரு பி. என். சர்மாவைப் பார்ப்பனரல்லாதாரல்லவாஎன்று கேட்டதுபோல் இருக்கின்றது, "கிரானிக்கல்" வரதராஜுலு முத்துரங்கம் முதலியோரைப்பார்ப்பனரல்லாதார் அல்லவாஎன்று கேட்டது. நல்லறிவும் கௌரவமுள்ள சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாதார் எவரேனும் 'சைமன் கமிஷன் பகிஷ்காரம் பகிஷ்காரம்' என்று கத்துகின்றார்களா? இல்லை. அப்படியிருக்கக் "கிரானிக்கல்" என் கண்டபடி உளறவேண்டும் காரணம் வடநாட்டிலுள் ஒவ்வொரு பத்திரிகைத் தொழிற்சாலையிலும் பார்ப்பன எலிகள் புகுந்து கடித்துக்கொண்டிருக்கின்றன. ஆகையினால்தான் வடநாட்டுப் பத்திரிகைகள் தென்னாட்டுப்பார்ப்பன பத்திரிகைகளின் எதிரொலிகளாய் உள்ளன.

'திராவிடன்'

---

## வெள்ள கோவில் கிராமபஞ்சாயத் சபை.

சென்ற 16-7-28 ல் போர்டு பாடசாலைக் கட்டிடத்தில் கிராம பஞ்சாயத் சபை கூடி கீழ் கண்ட தீர்மானங்களை நிறை வேற்றியிருக்கின்றது.

(1) இவ்வூர் சந்தைப்பேட்டைக்குள்ளிருக்கும் தெப்பக்குளம் கடந்தயிரண்டுகளாக தண்ணீரில்லாமல் வரண்டுகிடப்பதினால் சந்தை ஜனங்களுக்கும்கோவிலுக்காகவந்துதங்கும் பிரயாணிகட்கும் மிகக் கஷ்டமாயிருக்கிறதென்றும், இக்குளத்தை அடிவெட்டுவெட்டி சீர்திருத்தவேணுமென்றும் அதற்கு ஏற்படும் செலவில்பாதியை மெம்பர்கள் நன்கொடை செய்யவேண்டுமெனவும், ஏனைய பாதியை கவர்மெண்டாரவர்களைக் கேட்டுக் கொள்வதெனவும்

(2) இவ்வூரில் ஓர் புத்தகசாலை ஏற்படுத்தவேண்டுமெனவும அதற்காக ஏற்படும் செலவை கவர்மெண்ட்டாரைக் கேட்டுக்கொள்வதென்றும் இரண்டு தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின இதற்காகதற்சமயம் திரு எ தங்கமுத்துமுதலியார் பெருந்திமண்டியின் கட்டிடத்தில்புத்தகசாலை ஏற்படுத்துவதுவென்றும், தீர்மானித்ததாதலின் புத்தகசாலைக்குான் கொடையாகஸ்ரீமான்கள் எ தங்கமுத்துமுதலியார் சுதேசமித்திரனும் பஞ்சாயத்பிரசிடெண்டு யூ ஆர் இரங்கசாமி கவுண்டர் 'தமிழ்நாடும்' கிருஷ்ணப்பசெட்டியார் 'குடி அரசும்' டி எம் ஷண்முகசுந்தரம் பிள்ளை 'நவசக்தியும்' மற்றும்சில மெம்பர்கள் வேறுசில பத்திரிகைகளும் தருவித்துத் தருவதாகவும் வாக்களித்து அன்றேசில பத்திரிக்கைகளுக்காகப் பணமும் மணியாடர்செய்தபின் இரவு 8 மணிக்கு சபை இனிது கலைந்தது

ஓர் நிருபர்

---

## "குடி அரசு"க்கு நன்கொடை.

நிகழும் விபவ வருஷம் ஆடி மாதம் 5ந்தேதி எனது தகப்பனார் சு. நாராயண வைத்தியரின் வருஷாப்திகமானதால் அதன் ஞாபகார்த்தமாக "குடி அரசின்" வளர்ச்சிக்குச் சேர வேண்டி இக்கடிதத்தினுள் ஹாலண்டு ஜாவா ரூபாய் 5 அடக்கியிருப்பதை ஒப்புக் கொள்ள மனமுவந்து பிரார்த்திக்கிறேன்.

நா- நமச்சிவாயன். D. W. B.

---

## புரோகிதம் ஒழிந்த திதி.

புதுச்சேரி முத்தியாலுப்பேட்டையில் வதிபவரும் சிங்கப்பூர் பினாங்கில் சைலாசவியாபாரஞ்செய்பவரும் பிரபல ஆர். எஸ். கே. சுப்புராயசெட்டியார் கம்பெனி பங்காளிகளில் ஒருவருமாகிய கோவிந்தசாமி செட்டியார் தமது தகப்பனார் வருஷாந்திரத் திதியாகிய ஆடி-மீ 2-தேதி பார்ப்பனப் புரோகிதனை நீக்கி பக்தாய்த்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னம் படைத்தார்.

கே. சுந்தரராசலு.

---

## ஆலயப் பிரவேச தகராறு.

### அய்யங்கார்கள் அக்கிரமக் கதவடைப்பு.

### தர்மகர்த்தாக்களுக்கு லாயர் நோட்டீசு.

ஜூலை, 6-ந் தேதி சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி தரிசனத்துக்குச் சென்ற திரு. என். தண்டபாணி பிள்ளை முதலியவர்களை வழிவிடாது தடுத்து கோவில் கதவடைத்து விட்டதன் சம்மந்தமாக திரு. தண்டபாணியின் வக்கீல் திரு. வி. வாசுதேவ் பி. ஏ. பி. எல். அட்வோகேட் அவர்கள் இன்று மேற்படி ஆலய தர்மகர்த்தாக்களுக்குக் கீழ்கண்ட நோட்டீசு கொடுத்திருப்பதாக நமக்கறிவித்திருக்கின்றார்—

என் கட்சிக்காரர் திரு. என். தண்டபாணி பிள்ளை நரசிம்ம சுவாமி பிர்மோற்சவத்தின் கடைசிதினமாகிய ஜூலை 6-ந் தேதி வெள்ளிக்கிழமை இரவு 9-மணிக்குச் சுவாமி தரிசனத்துக்காக ஸ்ரீ பார்த்தசாரதி ஆலயத்திற்குச் சென்று துவஜஸ்தம்பத்தைத் தாண்டி இரண்டாவது கோபுரவாசலையணுகியதும் யாதொரு காரணமுமின்றி திடீரென்று மேற்படி ஆலய தர்மகர்த்தாக்களுள் ஒருவரான திரு. பார்த்தசாரதி அய்யங்காரின் சகோதரர் பாஷ்யம் அய்யங்காரும் ஆலய அம்ஞ ராமாநுஜாச்சாரியும் என் கட்சிக்காரர் உள்ளே வராதபடி தடுத்து உள்ளிருந்து கதவைச்சாத்தித் தாளிட்டுவிட்டனர். கதவைத் திறக்கும்படி எவ்வளவு கேட்டுக்கொண்டும் அவர்கள் திறக்க மறுத்து என் கட்சிக்காரர் உள்ளே சென்று சுவாமிதரிசனம் செய்யாதபடி தடுத்துவிட்டனர். இதனால் என் கட்சிக்காரர் மட்டுமன்றி மற்றும் அநேகரும் சுவாமி தரிசனம் செய்யமுடியாமல் சட்டவிரோதமாகத் தடுக்கப்பட்டதுடன், அதற்குமுன் உள்ளே சென்றிருந்த அநேகர் வெளியே வரமுடியாமலும் தயங்கவேண்டியதுமாயிற்று. மற்றும் என் கட்சிக்காரர் முன்வாசல் கதவை இவ்வாறு தமது முகத்தில் சாத்தித் தாளிடப்பட்டதால் உற்சவம் நடந்துகொண்டிருக்கும் வழியாகிய தளசிங்கப்பெருமாள் கோவில் தெருவாசல் வழியாக உள்ளே சென்று சுவாமியைத் தரிசிக்கச் சென்றபோதும் அவ்வாறே கதவைச் சாத்தி தாளிடப்பட்டதாயும் என் கட்சிக்காரர் சொல்லுகிறார். இவ்வாறு அவரை கோவிலுக்குள் செல்லவிடாமல் தடுத்துவிட்டதான இச்செய்கைகளால் என் கட்சிக்காரருக்கு மிகுந்த மனவருத்தமும் அவமானமு மேற்பட்டிருக்கின்றது. ஆதலால் இத்தகைய செய்கைகள் மேற் குறிப்பிடப்பட்ட இரு ஆசாமிகளும் தாமாகச் செய்ததா. அல்லது தர்மகர்த்தாக்கள் அல்லது மேல்பார்வை போர்டார் உத்தரவின் மீதாவது செய்யப்பட்டதா வென்றறியும்படி எனக் கறிவித்திருக்கின்றார். இன்னும் இரண்டு தினங்களுக்குள் இவ்விவரங்களுக்கு சரியான பதில் கிடைக்காவிட்டால் என் கட்சிக்காரர் மேற்குறிப்பிடப்பட்ட தப்பான செய்கைகளுக்கு நீங்களும் ஜவாப்தாரிகள்தான் என்று முடிவுசெய்வதுடன், அதன் சம்மந்தமாக கிரிமினல், சிவில் நடவடிக்கைகளும் நடத்தத் தயாராயிருக்கின்றார்.

---

## காமனாயக்கன் பாளையம் தபாலாபீஸ்.

பல்லடம் தாலூகா காமனாயக்கன் பாளயத்தில் இது வரையிலும் எக்ஸ்பரிமெண்டலாய் இருந்த தபால் ஆபீஸ் பர்மனெண்ட் ஆய்விட்டது.

ஒரு நிருபர்.

### தூத்துக்குடி
## தேசிய சபையும்,
### கனம். உ. சிதம்பரம் பிள்ளையும்.

---

கைவல்யசாமியார் எழுதுவது.

உள்ளத்தின் உணர்ச்சிகளும் விருப்பங்களும் அவசரங்களும ஒரேமாதிரி இருப்பதுகொண்டு ஒருவன் பிறருக்காக நியாயத்தோடு பரிந்துபேச உரிமையுடையோன் ஆவான் என்பதையும், மெய்யே சொல்லுவதில் அதனதன் அளவிற்குத்தகுந்த நிதானமும், ஆக்ஷேபிப்பதில் நியாயமும், வார்த்தைகளில் யதார்த்தமும, முடிவுகளில் தர்க்க வலிமையும் நீங்கள் குடி அரசில் காண்பதற்கு விவகாரங்களின் முன் பின்னுள்ள சங்கதிகளையும், உங்கள் ஆலோசனுசக்திகளையும் சேர்த்துப்பார்க்க வேண்டும்,

புத்தியின் சாமர்த்தியத்தினுல், தன்காரியத்திற்கு சமயத்தையும், செல்வாக்கையும், தன்னலத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளும் படித்த கூட்டத்தார்செய்யும் குற்றங்கள் அநேகம் வெளிக்குவராமலும், வந்தாலும் சொல்லமுடியாமலும், சொன்னுலும், அவற்றை நிலைநிறுத்தமுடியாமலும், வாதத்தாலும், வாய்வார்த்தையின் சாமர்த்தியத்தாலும், தன் செல்வாக்காலும், அதற்குப் பரிந்துபேசும் சில கூட்டத்தாராலும அவை மூடப்பட்டு, அதனுல் நஷ்டப்படுவோர்களின் கஷ்டத்தோடு அவையும் மூடப்படுகின்றன. இத்தனைக்குமடங்காமல் மீறிநிற்கும் குற்றங்களை எடுத்துப் பிரத்தியக்ஷமாக காண்பித்தால், அதையும் நம் பழக்கத்தாலுண்டான வழக்கமும், குற்றங்களை அன்னியர்பேரிலேயே சாட்டும் வாடிக்கையும், கடவுள்செயல், கருமத்தின் சக்தி, அவரவர்கள் வந்தவழி, அமைப்பு, தலைவிதிஎன்னும் சமாதானப்பேச்சும், "அவன் உன்னை யடித்தாலும் நீஏன் அவனைத்திட்டினுய்,அவன் உன்னைத் திட்டினுலும் அவனிடம் நீஏன் சண்டைக்குப்போனுய், அந்தப்பையன் வீட்டுவழியாகப் போனதினுல் தானே அவன் உன்னை அடித்தான்; விளையாடப் போகாமலிருந்தால் அவன்ஏன் இவனிடம் சண்டைக்கு வருகிறுன்" என்னும் சிறுவயதில் ஒழுக்கம் கற்பித்த முறையில், "அப்படியானுலும் அதைச்சொல்லலாமா, எப்படியானுலும் இப்படிச் சொல்லப்படாது" என்னும் தர்க்கநீதிகளும் எத்தனைபெரிய குற்றங்களையும் புதைக்கவிட்டுகிறது.

தூத்துக்குடி தேசியமகாநாட்டின் வைபவத்தை "தமிழ்நாடு" நிருபர் எழுதுகையில் அதன் மத்தியில் "காங்கிரஸ் விரோதிகளுக்கு எச்சரிக்கை; வ. உ. சிதம்பரம்பிள்ளையின் வீரமொழிகள்"என்னும் பெயர்கொடுத்து அவர்பேச்சையும் பெரிய எழுத்தில் எழுதியிருக்கிறுர். நம் தேசபக்தியின் உதயஒளியில் ஆத்மபரித்தியாகத்தின் தேவசக்தியானது இளைஞரிடத்தேஎன்று சுடர்விட்டெரிந்ததோ அன்று நம்நாட்டில் முதல்முதல் திரு. உ. சிதம்பரம்பிள்ளையின் இருதயத்தில் அவ்வொளிபற்றி எரிந்ததென்பதை நாங்கள் அறிவோம் ஆச்சரியமான பக்தியுடனே உலகங்களையெல்லாம் உதறிஎறிந்துவிட்டு ஸ்வதேசத்தொண்டுபுரிய ஓடிவந்த கீர்த்தியின் பங்கில் எங்களுக்கும் பாகமுண்டு; அவருக்கு அதில் பணலாபம்கிடையாது; சர்க்கார் தயவில்லை; சிலசமயம் பந்துமித்திரருடைய விரோதம் உண்டாயிருக்கிறது. இத்தனையிலும் அவர் வீரத்தை நாங்கள் இன்றைக்கும் கொண்டாடுகிறோம். இந்த குறுகிய கஷ்டமான பாதையின்மீது முறைவின் நீச் செல்லுவதற்கு வானத்திலிருந்து தேசபக்திக்கு வாவென்றசத்தம் கேட்டவுடனே இவர் தக்ஷணமே சரியென்று வந்ததையும் கண்டு பூரித்த எங்களுள்ளும் எந்த வீரமொழிக்கும் எங்களைவிட்டு விலகாது. வீரமும் கொடுமையும் சந்திக்காது என்பதை அவர் உணர்வார்.

"காங்கிரஸின் சக்தியையும் பலத்தையும் அறியாத சிலர் மேற்படி காங்கிரஸை அழிக்க முடியுமா என்பதையும் தன்னைப் போன்ற காங்கிரஸ் பக்தனையாவது எதிர்த்து நிற்க முடியுமாஎன்றும் கேட்கிறேன்; அவர்களும் என் நண்பர்கள் தான். அவர்கட்கு கடவுள் நல்ல புத்தி கொடுக்க வேண்டும். அவர்கள் பைத்தியக்காரர்களே" என்று திரு. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் சொன்னதாக அவ்வியாசத்திலிருக்கிறது.

தேசிய வாதிகளெல்லாம் ஒன்றாய்க் கூடி ராஜ்யவிஷயங்களை நிச்சயம் செய்யும் மகாசபைக்கு காங்கிரஸ் என்று பெயர். அப்பெயருக்கு கண்ணில்லை, காதில்லை, புத்தியும் செய்கையும் கிடையாது. அதை அழிக்கவேண்டுமென்று சொல்லுகிறவன் பைத்தியக்காரனுகவேயிருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட பித்தர்கள் பிள்ளையவர்கட்கு நண்பராயிருக்க முடியாது. அப்பெயரை அழிக்கப்புறப்படுகிறவர்களுக்கு கடவுள் நல்ல புத்தி கொடுக்க வேண்டியதுமில்லை. தேசிய வாதிகளான ஜனங்கள் சேர்ந்து தீர்மானம் பண்ணும் தீர்மானமும், அதன் ஜனங்களும் காங்கிரஸ். ஆனுல் அதற்கு கண்ணுண்டு, காதுண்டு. தீர்மானப்படி நடக்க ஒழுக்கமுண்டு; தைரியமுண்டு; வஞ்சனையில்லை; புரட்டில்லை. இப்பேர்ப்பட்டவர்கள், காங்கிரஸானுல் அந்தக்காங்கிரஸையும் அழிக்க முடியாது; அவசியமுமில்லை. அதை விரோதிப்பவன் தப்புடையவனுவான். இவனும் பிள்ளையவர்கள் சொல்லுகிறபடிபித்தனே. உண்மையான அத்தகைய காங்கிரஸைக் காட்டி அதன்மறைவில் அநேக தன்னலப்பிரியர்களை வைத்துக் கொண்டு பல சமூகங்களின் உயர்வைத்தடுத்து வந்த உயர்விற்கும் தேசியமே பிரதானமென்று எடுத்துச் சொல்லி தன் கூட்டத்தார்களை யெல்லாம் அந்தஸ்திற்கும் கீர்த்திக்கும் லாபத்திற்கும் எதுவாக்கிக் கொள்ளும் தேசிய வாதிகளின் காங்கிரஸ் ஒழியவேண்டுமென்று சொல்வதில் கடவுளிடமிருந்து வாங்கவேண்டிய நற்புத்தி என்ன விருக்கிறது. இது பிள்ளையவர்கட்குத் தெரியாதா? தூத்துக்குடி மகாநாட்டுத்தலைவர் டாக்டர் நாயுடுவிற்குத் தெரியாதா? ஒரு வருஷத்திற்கு முன்னும் பின்னும் அவர் "தமிழ்நாடு" பத்திரிகையில் காங்கிரஸ் வாதிகளைப் பற்றி கண்டித்தது போல் வேறு ஒரு பத்திரிகையும் அவ்வளவு விமர்சமாக கண்டித்து எழுதவில்லை. அந்தக்காலத்தில் அவரைப்பற்றி "சுதேசமித்திரன்" பத்திரிகையில் எழுதினது என் ஞாபகத்திலிருக்கிறது. "சுதேசமித்திரனின்" ஒருசார்பு ஒழியுமென்று நினைத்தேன்.அதற்கு இன்னும் காலம் வரவில்லை.

கண்ணுக்கு முன்னுல் நடந்ததையும் நடப்பதையும் எடுத்துக் காட்டுவதே கடவுளால்கொடுக்கப்பட்ட நல்லபுத்திக்கு லக்ஷணம். பிராமணன் என்னும் பேரை ஒழிக்கவோ அழிக்கவோசொல்லுவதில்லை; தத்துவத்தையோ நியமத்தையோ உடைய சாஸ்திரங்களை அழிக்கச்சொல்லவில்லை. மனிதனுடைய சௌகரியங்களுக்கும் அதிலும் "எனக்கே எல்லாம்" என்னும் சாஸ்திரங்களையும் பிராமணன் என்னும் பெரிய பேரால் யாரையும் வஞ்சித்து தன்காரியத்திற்கே அனுகூலப்படுத்திக் கொள்ளும் செய்கையே ஒழிய வேண்டுமென்கிறோம். அதுபோலவே காங்கிரஸை அசைக்கச் சொல்லவில்லை; அதிலுள்ள குற்றங்களும் சமயத்திற்குத் தகுந்த ஏற்பாடும் வஞ்சனையும் தன்னலமும் ஒழிய வேண்டும்" என்கிறோம்.

திரு உ. சிதம்பரம் பிள்ளையவர்களின் வீரமொழிகள் தேசிய வாதிகள் எடுத்துக்காட்டுவது போல் நம் நாட்டு பெரியவர்களுக்குள் பெரியவர்களான ரவீந்திரநாத்தாகூர், சுவாமி விவேகானந்தர் இவர்களுடைய வார்த்தைகளையும் சொல்லுகிறேன். நம் உலகவாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் குரூரமான கொடுங்கோன்மை நடப்பதினுல் ஜனங்களுக்கு நன்மை என்று நம்புவோர் ராஜாங்கத்தில் கூசாமல் பரிபூரண விடுதலை கேட்பது மிகுந்த வியப்பிற்கு இடமாகிறது. நம்மை அசையாதபடி பலி மிருகம்போலே கட்டிப்போட்டிருந்த வீண் தற்புகழ்ச்சியை நான் பழிக்கிறேன். ராஜாங்கத்தாரை நோக்கி, 'ஸாம்ராஜ்ய சபைகளில் எங்களுக்கு ஸ்தானம் வேண்டும்' என்றுகேட்பதும், ஜனங்களை நோக்கி 'ஜாதியாசாரங்களிலும் சொந்த காரியங்களிலும் கூட எஜமான் போட்ட கோட்டை மீறி நடக்காதே' என்று சொல்லுவதும் ஒரே வித கர்வத்தால் உண்டாவது விநோத மன்றோ? இதற்குப்பெயர் ஸநாதன தர்ம புனர் உத்தாரணம் என்கிறோம். ஸநாதனக் கக்ஷித்தலைவர் நாம் ஒரு கண்ணில் உறங்கி மற்றொரு கண்ணில் விழித்திருக்கும்படி அசாத்திய உத்திரவு போடுகிறுர்கள்."

சுவாமிவிவேகானந்தர் சொன்னதாவது"நமது ஜனங்கள் ஆங்கிலேயரிடத்தினின்றும் அதிக அதிகாரத்தைப்பெறுவதற்குசபைகள்கூட்டுகின்றனர். அவர்கள் சிறிக்கின்றனர்; ஸ்வதந்திரத்தை கொடுப்பதற்கு தயாராக இல்லாத எவனும் ஸ்வதந்திரத்திற்கு அருகனல்லன். ஆங்கிலேயர்கள் அதிகாரத்தை யெல்லாம் உங்களிடத்தில் கொடுத்துவிடுகிறுர்களென்று வைத்துக் கொள்ளுவோம். ஏன் ? அப்பொது அதிகாரம் வகிப்பவர்கள் பொது ஜனங்களை அடக்கி வைத்துக் கொண்டு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கமாட்டார்கள்.அடிமைகள் அடிமைகளை உண்டாக்குவதற்கு அதிகாரத்தை விரும்புகின்றனர்" மகாத்மா காந்தியவர்களும் "தீண்டாமை ஒழிந்தாலல்லது எதற்கும் விமோசனமில்லை" என்றே சொல்லுகிறுர். இவர்களெல்லாம் நாடு சுற்றி நலங்கண்டு நலமுரைத்த பெரியவர்கள். நம்மைக் காட்டுமிராண்டிகளல்லவென்று காட்டிக் கொடுத்த பெரியவர்களும் அவர்களே.

உயிரற்ற ஸமாதானமென்ற அறைக்குள் மனிதன் எக்காலத்திலும் திருப்தியுடன் அடைபட்டிருக்கமாட்டான். அபிவிருத்திக்குப் பாடுபடுதல் அவனுடைய அத்தியந்த அவசரம். தான் தன் பப்பட்டும் ஒரு கொள்கையைத் தூக்கி நிறுத்துதல் அதன் அடையாளம். இதை தேசிய வாதியும் சீர்திருத்த வாதியும் பங்குபோட்டுக் கொண்டாலும் அவரவர்களே தனித்தனியாக அபகரித்துக்கொண்டாலும் எல்லாப் பெரியதேசத்தாரின் சரித்திரத்திலும் இந்த போராட்டத்தின் எதிர்க்க முடியாத நதி நுரைவீசி உறுமி ஜயாபஜயங்களாகிய மேடுபள்ளங்களினூடே தடைகளையெல்லாம் உடைத்துக்கொண்டு போகிறது. நம்தேசத்தில் அந்நியானது சர்க்கார் வீதியில்கூட எல்லாரும் போகக்கூடாது என்னும் அணையை அசைக்கமுடியவில்லையே' தேசிய மகாநாட்டு வீரசிங்கங்கள் அந்த அணைபண்டைல்லவா கொஜிக்க வேண்டும். அப்பொழுதல்லவா அந்நதி தங்குதடையில்லாமல் எல்லா இடமும் பாயும். ராஜீய பக்கவாத நோயுடையவர்களின் கண்ணில் நம் நாட்டு சமூகக்கொடுமை படுவதில்லையோ!

பிள்ளையவர்கள்கள் தம்மைப்போன்றகாங்கிரஸ் பக்தர்களைஎதிர்த்து நிற்கமுடியுமா என்று கேட்கின்றுர். பிள்ளையவர்களின் மறைவில் வாழ நினைக்கும் தேசிய வாதிகளும் அவர்களுக்குள் ஒளிந்து கொண்டு காங்கிரஸ் பேரைச்சொல்லி சமயம் கிடைக்கையில் தனக்கும் தங்கள் கூட்டத்தாருக்கும் நன்மைசெய்து கொள்வதற்கு நியாயத்தை சௌகர்யத்தால் மெழுகிக்கொள்ள வேண்டுமென நினைப்பதே சுபாவமாக உடையவர்களை உலகமே எதிர்த்து அழித்துவிடும். அதற்கு எத்தனையும் பலனளிக்காது. மனிதன் தர்மநெறியில் பந்து

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

# புராணங்கள்.

(சத்தியவிரதர் எழுதுவது.)

புராணங்கள் என்று சொல்லப்படுபவைகளைப்பற்றி மனிதர்கள் குற்றம் சொல்லுவதும், அவற்றை பொய்யும்புளுகும் நிறைந்த பாண்டங்கள் என்பதும், அவைகளினால் மக்களுக்குள் மூடநம்பிக்கைகள் ஏற்பட்டு பகுத்தறிவு இழக்க நேரிட்டதென்று சொல்லப்படுவதும் ஆகிய விஷயங்கள் வெகு நாளைக்கு முன் இருந்தே பல பெரியார்கள் என்பவர்கள் சொன்னதாகக் காணப்பட்டாலும் இப்போதுதான் அவற்றை பலர் ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். இந்துக்கள் என்போர்களிலேயே அரசியல் தலைவர்கள் என்போர்களும் மதத்தலைவர்கள் என்போர்களுங்கூட இப்புராணக்கூற்றுகளை தைரியமாய் கண்டிக்க முன்வந்திருப்பதுடன் அவை ஒழிந்தே தீரவேண்டும் என்று சொல்லும் அளவுக்குக் கூட வந்துவிட்டார்கள். அன்றியும் இது சமயம் எங்கு பார்த்தாலும் வாலிபர் உள்ளத்திலும் அறிஞர் உள்ளத்திலும் இதே கவனம் குடிகொண்டிருக்கிறது. இது மாத்திரமல்லாமல் இந்து மதம் என்று சொல்லப்படுவது வேதம் என்பதாகிய ஒன்றை ஆதாரமாகக் கொண்டது என்று விவகாரத்திற்கு மாத்திரம் சிலர் சொல்லிக்கொள்ளக்கூடியதாயிருந்தாலும் அவ்வேத மதம் என்னும் இந்து மதம், செய்கையிலும் தோற்றத்திலும் எண்ணத்திலும் விளங்குவதெல்லாம் மேல்கண்ட "பொய்யும் புளுகும் கொண்டது" என்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்ற புராணங்களையேதான் ஆதாரமாய்க் கொண்டதாகவே இருக்கின்றது. எவ்வளவு பெரிய வேதாந்தி என்று சொல்லிக்கொள்பவனும், பண்டிதன், ஆராய்ச்சிக்காரன், சன்யாசி, மடாதிபதி என்று சொல்லிக்கொள்பவர்களும், மற்றும் "சரியை" "கிரியை" "யோகம்" முதலிய நிலைகளைக்கடந்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களும் ஆகிய எல்லோரும் வாயளவில விவகாரத்தின் போது மாத்திரம் "புராணங்கள் கற்பனை" என்பதாக சொல்லுகின்றார்களே தவிர அவரவர்களுடைய சொந்த நடை உடைபாவனை, எண்ணம், தோற்றம்முதலியவைகள் முழுவதும் புராணக்கூற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்படுகின்றதே யல்லாமல் வேறில்லை.

அது மாத்திரமல்லாமல் மேல்கண்ட இந்துக்கள் என்போர்களின் தெய்வங்கள் என்பவை முழுவதும் அதாவது "பிள்ளையார்" முதல் "பிரணவ சொரூபம்" வரை அப்புராணக்கூற்றில் கற்பிக்கப்பட்ட தெய்வங்களாகவும் அவைகளினுடைய நாமங்களும் ரூபங்களும் குணங்களும் செய்கைகளும் எல்லாம் அப்புராணக் கூற்றைக்கொண்டதாகவும் காணப்படுவதுடன் அதற்கு மக்கள் செய்யும் பூசனை, வேண்டுதல், உற்சவம் முதலிய யாவும் அக்கற்பனைகளையே ஆதாரமாகக் கொண்டதாகவும் காணப்படுவதும் எவரும் சுலபத்தில் மறுக்கக்கூடியதல்ல.

அன்றியும் அவ்விந்து மதம் என்பதைச் [illegible]க்கள் அணியும் குறிகள், அனுஷ்டிக்கும் பண்டிகைகள், கொள்ளும் விரதங்கள், செய்யும் சடங்குகள் முதலிய யாவும் அப்புராணக் கற்பனையின்படியே யல்லாமல் வேறல்ல.

அன்றியும் மனிதனுக்கு மிகவும் முக்கியமானது என்று சொல்லப்படும் முக்தி, பாவம், புண்ணியம், தர்மம், மோக்ஷம், நரகம் ஆகிய எண்ணங்களும் அக்கற்பனைகளைக் கொண்டதே ஒழிய வேறில்லை.

அதுமாத்திரமல்லாமல் பிரத்தியக்ஷத்திற்கும் பகுத்தறிவிற்கும் கொஞ்சங்கூட சந்தேகத்திற்கிடமில்லாமல் தோன்றக்கூடிய கல், மண், புல், பூண்டு, மரம், செடி, சமுத்திரம், மலை, நதி, குளம், சூரியன், சந்திரன், பகல், இரவு, இருட்டு, வெளிச்சம் முதலாகிய எல்லாத்தோற்றங்களையும் அப்புராணக் கற்பனைக்குள் கற்பிக்கப்பட்ட விதமாகவே கருதி வழிபட்டு வருகின்றதும் மறுக்கக் கூடியதல்ல.

எனவே, இது போன்றவைகளையே நித்திய வாழ்க்கையிலும் இம்மைக்கும் மறுமை என்பதற்கும எல்லா இந்துக்கள் என்போர்களும் ஆதாரமாய்க்கொண்டிருப்பதால் இந்நிலையில் இந்து மதம் என்பதை மேல்கண்ட புராண மதம் என்பதாக யாவரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

அதை யாராவது மறுப்பதானால் வார்த்தையளவில் மறுக்கலாமே அல்லாமல் எண்ணத்தளவிலாவது செய்கை அளவிலாவது அநுபோகவாயிலாகவாவது மறுப்பது என்பது ஒரு இந்து என்பவனுக்கோ அல்லது அதனுட் பிரிவுக்காரர் என்பவர்களாகிய வைணவர்கள், சைவர்கள், ஸ்மார்த்தர்கள், என்பவர்கள் முதலியவர்களுக்கோ சுலப சாத்தியமானதல்லவென்றே சொல்ல வேண்டும்.

எனவே இவ்விந்து மதம் என்பதிற்பட்ட இந்துக்கள் என்போர்களில் இவ்வளவு ஆதிக்கம் பெற்றிருக்கும் அதாவது மனம், வாக்கு, காயம், அனுபவம் ஆகியவைகளில் ஊறிததும்பி நிற்கும் இப்புராணக்கூற்றுகளை இந்துக்கள் என்போர்களே இப்போது தைரியமாய் முன்வந்து "புராணக்குப்பைகள்" என்றும் "மூடப்பழக்க வழக்கங்கள்" என்றும் "மக்கள் தூய வாழ்வுக்கும் ஒழுக்கங்களுக்கும் கேடு சூழக்கூடிய' தென்றும் "மிருக உணர்ச்சிக்கு ஏற்ற" தென்றும் "கற்பனைக் கதைகள்" என்றும் "புளுகு மூட்டைகள்" என்றும் "மத வெறியர்களால் உண்டாக்கப்பட்டது" என்றும் 'அவைகளை ஒழிக்க வேண்டும்" என்றும் வெகு சுலபத்தில் சொல்லக்கூடிய நிலைமை எப்படி வந்தது? என்பதும் எதனால் இவ்வளவு தூரம் சொல்ல மக்களுக்கு இடம் கிடைத்தது என்பதும் இந்த இடத்தில் யோசிக்கவேண்டிய முக்கியமான காரியமாகும். அப்படி யோசிப்போமானால் அதற்கு நியாயமானதாக ஒரே ஒரு சமாதானந்தான் சொல்லக் கூடும்.

அதாவது, பொதுவாக மக்களுக்கு அறிவு வளர்ச்சியால் ஏற்பட்ட உணர்ச்சியின் பலனாக விவகாரத்தில் நியாயத்திற்கு ஏற்காததும் விசாரணைக்கு நிற்காததும் அனுபவத்திற்கும் விஞ்ஞான தத்துவத்திற்கும் (சையன்சுக்கும்) ஒத்துவராததுமாயிருக்கின்றது என்கின்ற காரணத் தானே யல்லாமல் வேறல்ல.

மற்றபடி வேறு ஏதாவது காரணம் சொல்லவேண்டுமானால், ஒரு சமயக்காரரை பிற சமயக்காரர் தூற்றுவதற்காக எழுதப்பட்டதென்று சொல்லும் நிலையிலோ, அல்லது தன் சமயந் தான் சரி, மற்ற சமயம் பொய் என்று சொல்லுவதற்கோ, அல்லது தன் கடவுள் பெரியவர், மற்றக் கடவுள் தாழ்ந்தவர் என்று சொல்வதற்கோ அநுகூலமாக சில புராணங்களை ஏற்றுக்கொண்டு சில புராணங்களைத் தள்ள காரணமாகச் சொல்லலாம். அப்படிக்கில்லாமல் யுக்தி அனுபவத்திற்கு ஒவ்வாததாகவும், சையன்சுக்கு நிற்காததாகவும் இருந்தால் தள்ளிவிடவேண்டியதுதான் என்று சொல்லுவோமாகில் ஒப்புக்கொள்ளத்தக்க புராணம் என்பது ஒன்றுகூட இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இது நிற்க, இப்புராணக் கூற்றுகளில், ஆரியர்களால் கொணரப்பட்டது, சில என்றும், தமிழ்நாட்டில் ஏற்பட்டது. சில என்றும் இரு பிரிவுகள் தோன்றி அதில் சிலவற்றை தள்ளவும் கொள்ளவும் விவாதங்கள் ஒருபுறமும் சில புராணங்களுக்கு ஆதாரம் இல்லை, கல்வெட்டு இல்லை, அகச்சான்று புறச்சான்றுஇல்லை, என்பவைகள்போன்ற பல விவகாரங்களின் மூலம் தள்ளத்தக்கது கொள்ளத்தக்கது என்கின்றது போன்ற விவகாரம் ஒரு புறமும் மற்றும் அவ்வப்புராணங்களைச் சார்ந்த சமயவாதிகளின் செல்வாக்கு, பலாத்காரம், சூழ்ச்சி, வாக்குத்திறம் முதலியவைகளின் வலிமை, இளைப்பு இவைகளின் யோக்கியதைகள் ஒரு புறமுமாக இருந்து அந்தந்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி தள்ளவோ கொள்ளவோ முடிகின்றதே அல்லாமல் வேறில்லை.

அப்படிக்கின்றி பொது நோக்கில் நின்று சுருதி, யுக்தி, அனுபவம், சையன்சு, ஆகியவைகளுக்கு ஒத்த முறையில் நின்று புராணக் கூற்றை ஆராய்வோம் என்னும் நிலையிலேயே இவ்வியாசத்தில் பெரியபுராணம் என்பதைப்பற்றி ஆராயப்புகுகின்றோம். வாசகர்கள் அவற்றை கூர்ந்து படித்து அதில் உள்ள உண்மைகளை உணரவேண்டுமென்கிறோம்.

### "பெரிய புராணம்"

பெரியபுராணம் என்பது தொண்டர் புராணம் என்றும் சொல்லப்படும். ஏனெனில் அதில் தொண்டர்கள் என்பவர்களைப் பற்றிய கதைகளே பெரிதும் சொல்லப்படுகிறது.

அத்தொண்டபுராணம் வெளியானதற்கு பல மார்க்கங்கள் சொல்லப்படினும் அவைகளில இரண்டு மார்க்கங்கள் முக்கியமாகச் சொல்லப்படுகின்றன.

அவைகளில் ஒன்று ஒருநாள் கைலைங்கிரியில்வசிக்கும் வியாக்கிரபாத முனிவருடைய குமாரரான உபமன்யுமுனிவர் மற்ற முனிவர் கூட்டத்திலிருக்கும போது திடீரென்று ஒரு ஒளி தோன்றியதாகவும அதைக்கண்டு எல்லோரும் திகைத்து உபமன்னிய முனிவரை "இது என்ன ஆச்சரியம்" என்று கேட்டதாகவும் அது கேட்டு அவர் "சுந்தரமூர்த்

(இதன் தொடர்ச்சி 13-ம பக்கம் பார்க்க)

# தென்னிந்திய ரயில்வே சம்பவங்கள்.

## பொருட் சேதங்களும் உயிர்ச்சேதங்களும்.

தூத்துக்குடி ஜூலை 20 தேதிக்கு 8-50 க்கு வரவேண்டிய வண்டி 11-40 க்கு வந்தது பிளாட்பாரத்துக்குள் வண்டி வந்ததும் பிளாட்பாரத்துக்கு வெளியிலிருந்த ஜனக்கூட்டத்தைக் கலைக்க போலீசாருக்கு செய்தி அனுப்பப்பட்டது. இது செய்தியறிந்த ஜனங்கள் கற்களை ஸ்டேஷனுக்குள் விட்டெறிந்தனர். வண்டிக் கண்ணாடி ஜன்னல்கள் உடைந்து போயின கார்டுக்கு காயங்களேற்பட்டன. போலீசார் வந்து கூட்டத்தைக் கலைத்தனர். கூட்டத்தில் பலருக்குக்காயம்.

மேலூர் ஷை வண்டி 12-15க்கு மேலூர் போய்ச்சேர்ந்தது. ஜனங்கள் ஸ்டேஷனுக்குள் புகுந்து மேஜை, நாற்காலி, ஜன்னல், விளக்கு முதலியவைகளை உடைத்து விட்டு டிக்கட்டுகளை எடுத்துக் கொண்டு போய் விட்டனர்.

மாயவரம் ஜூலை 21. போலீசார் கூட்டத்தைக் கலைக்க துப்பாக்கிப் பிரயோகம் செய்ய, கல்லடியால் போலீசாரில் 9 பேருக்கு பலத்த காயம்.

பூதலூர் ஜூலை 21. காலை வழக்கமாய் சென்னை வரவேண்டிய போட்மெயில் பூதலூருக்கருகில் தண்டவாளத்தை விட்டு இறங்கி விட்டதாயும் அதனை சரிப்படுத்தி மீண்டும் லெடுமோத்திற்குப்பின் புறப்படச் செய்ததாயும் தெரிகிறது.

எழும்பூர். ஜூலை 21. வேலை நிறுத்தக்காரர்கள் வேலை செய்து கொண்டிருந்த தங்கள் தோழரிடத்தில் பேசிக்கொண்டிருந்த தற்காக சிலரை கைதிசெய்து காவலில் வைத்தார்கள். மற்ற தொழிலாளர்கள் தங்களையும் காவலில் வைக்கும்படி சத்தியாக்கிரகம் செய்ததிற்கு, போலீசார் மோட்டார் லாரிகளில் துப்பாக்கிகளுடன் வந்து தொழிலாளரை துப்பாக்கிகளால் அடித்து துன்புறுத்தியதாகத் தெரிகிறது.

மேலூரில் ஜூலை 21. போலீசார் துப்பாக்கிப்பிரயோகத்தால் ஒருவர் கொல்லப்பட்டார். பலருக்குக் காயமேற்பட்டது. மேலூர்ஸ்டேஷன் கட்டிடத்திற்கு சேதம் ஏற்பட்டது.

பல்லாவரம் ஜூலை 21. பாசஞ்சர் வண்டியைவிடாமல சத்தியாக்கிரகம் செய்தனர் ஒருமாணவன் உட்பட 12 பேரை கைதி செய்திருக்கிறார்கள்.

விக்கிரவாண்டி ஜூலை 21. திருவனந்தபுரம் எக்ஸ் பிரசுக்கு முன்னால் லைனில் படுத்து சத்தியாக்கிரகம் செய்ததாக 22 பேரை பயனட்களால் தாக்கி காயப்படுத்தி கைதி செய்திருக்கிறார்கள்.

பண்ருட்டி, ஜூலை 22. இங்கிருந்து புறப்பட்டவண்டியை ஒரு கூட்டத்தார் ஓடிருடித்தனர். அவர்களை போலீஸ் சார்ஜண்ட் ரிசர்வ்கான்ஸ்டேபில் ஆறுபேருடன் துப்பாக்கி முனையில் கத்தியுடன் தாக்கினர்.

விழுப்புரம் ஜூலை 22. வண்டிஸ்டேஷனுக்குவருமுன் பாதையில்படுத்து சத்தியாக்கிரஹம் செய்தனர். போலீசார் துப்பாக்கிமுனையில்தாக்கியும், அவர்களை அப்புறப்படுத்த முடியவில்லை. பிறகு சுட்டனர். ஜனங்கள் இஞ்சினிலிருந்த நெருப்பை அணைத்து விட்டனர்.

காட்டுப்பாக்கம் ஜூலை 22. போட்மெயில் 11-30 மணிக்கு கவிழ்ந்துவிட்டது. ஒருவர் இறந்துவிட்டார். பலருக்குக்காயம்.

கொடைக்கானல் ஜூலை 23. என்ஜின்களும் 3. வண்டிகளும் கவிழ்ந்தன. பலருக்கு உயிர்ச்சேதமென தெரிகிறது.

தூத்துக்குடி ஜூலை 23 ஒருஎன்ஜினும் 3 வண்டிகளும் நொருங்கின இங்கும் பெருத்த ஜனசேதம்.

ஈரோடு ஜூலை 23. ஈரோடு ஸ்டேஷன் மாஸ்டர் அக்ரமமாக பித்த ரசிப்பந்திகளை பூட்டிவைத்து வேலை வாங்கிக்கொண்டு வருகிறார்.

விழுப்புரம் ஜூலை 23. வேலைநிறுத்தக்காரர்கள் அமைதியாக தண்டவாளத்தில் படுத்திருந்தனர். போலீஸ் சூப்பிரண்டெண்டெண்டு மாஜிஸ்டிரேட்டு உத்திரவில்லாமலே சுட ஆரம்பித்தனர். நால்வர்காயமடைந்தனர்.

எழும்பூர் ஜூலை 24. தோட்டிகளும் வேலை நிறுத்தம் செய்துவிட்டதால் ஸ்டேஷனிலுள்ள கக்கூஸ்களும் சுத்தம்செய்யாமலிருக்கின்றன. அதனால் கோயமுத்தூர் போத்தனூர், சேலம், முதலிய ஸ்டேஷன்களும் S. I. R. க்குச்சேர்ந்த ப்ராட்கேஜிலுள்ள இன்னும் அனேக ஸ்டேஷன்களும் நாற்றமெடுத்து விட்டன

எர்ணாகுளத்தில் வேலைநிறுத்தத்தால், பெட்ரோல பஞ்சத்தால் பஸ்சர்விஸும் குறைந்துவிட்டது.

இன்னும், பின்வந்த செய்திகளால் பல அபாய சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும் பல விடங்களில் தொழிலாளிகளுக்கும் பொது மக்களுக்கும் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் கொடுமைகளும் நிகழ்ந்ததாகத் தெரிகிறது.

## தடையுத்திரவுகளும் அரெஸ்டுகளும்

மாயவரம். 24 உ தஞ்சைஜில்லா பார்ப்பனரல்லாதார் சங்கத்தின் ஆதரவில் நேற்றுமாலை 5 மணிக்கு திரு. எஸ். வி. லிங்கம் அவர்கள் தலைமையில் தொழிலாளர்கூட்டம் நடந்தபொழுது தலைவருக்கு 144 வது பிரிவு உத்திரவு அளிக்கப்பட்டது. கூட்டம் அமைதியாகக்கலைந்தது.

பண்ருட்டி திரு. அந்தோணிசாமி, கிருஷ்ணசாமி, ஜெகநாதன், ஆரோக்கியசாமி, இப்ராகிம், கோவிந்தராஜுலு, குழந்தைசாமி, ராமசாமி, நடேசபிள்ளை, சின்னப்பாபிள்ளை, கிருஷ்ணசாமி, சந்தானம்பிள்ளை, முதலியவர்கள் அரஸ்ட்செய்யப்பட்டு லாக்கப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். எனினும் ஷை யார்கள் உற்சாகத்துடன்தானிருக்கிறார்கள்.

சென்னை தொழிலாளர் கூட்டங்கட்குப் போகக்கூடாதென 'திராவிடன்' பத்திராதிபர்திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கட்கும், திருவாளர்கள் கல்யாண சுந்தர முதலியார், தண்டபாணிப்பிள்ளை, குழந்தை முதலியவர்களுக்கும் 144 வது உத்தரவு போடப்பட்டுள்ளது.

நாகை தொழிலாளர் திரு. மாணிக்கதாஸ் கைது செய்யப்பட்டு போலீஸ் காவலில் இருக்கிறார்.

சென்னைப் பொதுமக்களும், தொழிலாளர் விஷயமாய் கூட்டம் கூட்டவோ, ஊர்வலம் செய்யவோ கூடாதென 144வது உத்தரவு இடப்பட்டுள்ளார்கள். திரு, எம். சிங்காரவேலு செட்டியார் வீடு சோதனை செய்யப்பட்டது

மதுரையில் 22 தேதியில் 15 பேரும் பிறகு 41 பேரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். துப்பாக்கிப் பிரயோகத்தால் மூவர் காயமடைந்தனர்.

செங்கல்பட்டு ரயில்வே வேலைநிறுத்தத்தை ஆதரித்து செங்கல்பட்டு ஜில்லாமுழுவதிலுமுள்ள பொது ஜனங்கள் கூட்டங்கள் கூட்டுவதும் ஊர்வலம் நடத்துவதும் கூடாதென்று ஜில்லா மாஜிஸ்ட்ரேட் 144 வது செக்ஷன் தடையுத்திரவு பிறப்பித்திருக்கிறார்.

திருச்சி தொழிலாளர் சென்ட்ரல் யூனியன் தலைவரும் வேலை நிறுத்தக் கமிட்டித் தலைவருமாகிய திருவாளர் டி. கிருஷ்ணசாமி பிள்ளை கைது செய்யப்பட்டிருக்கிறார்.

பாலக்கரை திருச்சி ஜங்ஷனிலிருந்து வந்து கொண்டிருந்த லைட் எஞ்சின் ஒன்று பாலக்கரை ஸ்டேஷனுக்கருகில் கைகாட்டிக்குப்பக்கத்தில் ஒரு சர்வீஸ் பஸ்ஸுடன் மோதிக் கொண்டது. அதில் ஒரு மாதும் இரண்டு குழந்தைகளும் உட்பட உடனே பத்து பேர்கள் இறந்தனர். அவ்விடத்தில் பெரும் கூட்டம் கூடி விட்டது, போலீசார் அவ்விடத்திற்கு வந்து கூட்டத்தைக் கலைக்க முயன்றனர் முடியவில்லை. எனவே போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் அதில் நால்வருக்கு காயமேற்பட்டதென்று கூறப்படுகின்றது.

மற்றொரு தந்தி மேற்படியிடத்தில் துப்பாக்கிப்பிரயோகத்தால் இரண்டுகுழந்தைகள் உள்பட நால்வர் உடனே மாண்டனர் என்றும், மூவர் வைத்தியசாலையில் அபாய நிலையில்கிடக்கின்றனரென்றும் கூறுகின்றது.

சேலம் ஜூலை25உசத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்போகிறார்கள். ஜனாப் இஸ்மெயில்கான் கைதுசெய்யப்பட்டார்.

நாகபட்டணம் போலீஸார் தொழிலாளர் காரியாலத்தை பரிசோதனை செய்து சிவப்பு கொடிகளையும் சில ரிகார்டுகளையும் கைப்பற்றியுள்ளார்கள்.

மதுரை ஜூலை 26 தொழிலாளர்சங்கக் காரியாலயத்தை போலீசார் பரிசோதனை செய்து சிலரிகார்டுகளை கைவசப்படுத்திக்கொண்டதாய்த் தெரிகிறது. கொடைக்கானல் விபத்தால் பலர் மதுரை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர் அவர்களில் மூவர் இறந்துவிட்டதாய் வருகிறது.

திருச்சி ஜூலை 26. T. V. K. நாயுடு, 109, i. p. c. 126, 28 ரயில்வேசட்டபடி கைது செய்யப்பட்டார். செய்தித் திரட்டு.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-௵ ஆடி ௴ 14-உ

## பல்லாவரத்து பண்டிதர்.

திரு. வேதாசலம் அவர்கள் சென்னை சுகானந்த சபையில் சமீபத்தில் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கரையும் அவர் நண்பர்களையும் சுயமரியாதை இயக்கத்தையும் பற்றி மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசினதாகவும் "சுத்தசைவ ரத்த ஓட்டம் உள்ளவர்கள் இன்னமும் இவர்களைக் கொல்லாமல் இருக்கலாமா" என்பதாக சபையோர்களைக் கேட்டதாகவும் "தமிழ் நாடு" "திராவிடன்" பத்திரிகைகளில் காணப்படுகின்றது.

அதே கூட்டத்தில் திரு. வேதாசலத்தை திருவாளர்கள் தண்டபாணிபிள்ளை, ராமனுஜன், கண்ணப்பர் முதலிய பலர் பல கேள்விகள் கேட்டதாகவும் பதில் சொல்ல இயலாமல் திக்கு முக்காடியதாகவும் கடைசியாக கண்ணீர் விட்டு அழுததாகவும் மற்றும் பலவிதமாய் காணப்படுகின்றது. அன்றியும், சிற்சில விஷயங்களில் திரு வேதாசலம், நாயக்கரைத் தாக்க உண்மைக்கு மாறாக சில கற்பனைகள் செய்து கொண்டு போனதாகவும் அதை அக்கூட்டத்திலேயே வெளியாக்கி அவர் அவமானமடையச் செய்ததாகவும் 'திராவிடனி'ல் காணப்படுகின்றது. அவைகள் அடுத்தவாரத்திற்குள் திரு. வேதாசலம் அவர்களால் மறுக்கப்படாத வரை 'குடி அரசி'ல் அவைகளை எடுத்து எழுதி தக்க சமாதானங்கள் வெளியாக்கப்படும்.

## ஈரோட்டில் தொழிலாளர் மீட்டிங்குகள்.

ஈரோட்டில் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகாமையில் திரு வெங்கட்டநாயக்கர் சத்திரத்தில் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தின் கீழ் ஜுலை 21-ல் ஒரு தொழிலாளர் வேலை நிறுத்த மீட்டிங்கு கூடியது. மீட்டிங்குக்கு ஏராளமான ஜனங்களும் தொழிலாளர்களும் கூடியிருந்தார்கள். திருவாளர்கள் தேவ அன்பும், முத்துகிருஷ்ணன், அரூர் வேடி செட்டியார், மண்டி சி. குமாரசாமி கவுண்டர் முதலியோர்கள் தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கு அனுதாபம் காட்டி பேசினார்கள்.

மறுநாள் கோணைவாய்க்கால் டோகாட்டில் திரு. நாயக்கர் அக்கிராசனத்தில் ஒரு மீட்டிங்கு கூடியது.

அதற்கும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். அங்கு இரண்டு மூன்று நாளாக லைன்களில் நடந்த விஷயங்களை எடுத்துச் சொல்லி சத்தியாக்கிரக விஷயமாய் பேசப்பட்டது.

மறுபடியும் 25-தேதி புதன்கிழமை கடைவீதி அலிசவுக்கில் 'தாஜுல் இஸ்லாம்' பத்திராதிபர் ஜனாப் கைனுமுகம்மது சாயபு அவர்கள் தலைமையில் ஒரு மீட்டிங்கு கூட்டப்பட்டது.

தொழிலாளர்களும் திருவாளர் M.A. ஈஸ்வரனும் மற்றும் சில நண்பர்களும் பேசி சில தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள்.

27—7—28-ந் தேதி சாயங்கிரம் 7-மணிக்கு, ஈரோடு "காங்கிரஸ்" என்கிற காரைவாய்க்கால் மைதானத்தில், தொழிலாளருக்கு அனுதாபங்காட்ட E. P. வெங்கிடாசலம் செட்டியார் அக்கிராசனத்தின் கீழ் ஒரு பொதுமக்களின் மகாநாடு நடைபெற்றது. தொழிலாளர் சகோதரர்கள் ஸ்ரீமான்கள் தேவ அன்பும், முத்துகிருஷ்ண நாயுடு அவர்களும் பேசினார்கள்.

பிறகு ஸ்ரீமான்கள் சுப்பண்ணா ஆசாரியார் M. A. ஈஸ்வரன், ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களும் பேசினார்கள்.

தீர்மானங்கள்:— ஸ்ரீமான் நாய்க்கர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, அக்கிராசனர் அவர்களால் பொதுமக்களின் அங்கீகாரத்திற்கு விடப்பட்டு, ஏகமனதாய் நிறைவேறியது.

தீர்மானங்கள்:—

1. ரயில்வே பொதுவேலை நிறுத்த சம்பந்தமாக கவர்ன்மெண்டாரால் கைது செய்யப்பட்டவர்களுக்கும், போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தாருக்கும் மற்றும் எதிர்பாராத சம்பவங்களால் ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களால் வருந்தும் குடும்பத்தாருக்கும் இக்கூட்டம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. தொழிலாளர்கள் கோரிக்கைகள் மிகவும் இரக்கமானது என்று தீர்மானிப்பதோடு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களுக்கு பொது ஜனங்கள் தங்களால் கூடிய ஆதரவளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதாக இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

3. அரசாங்கத்தார், போலீசார், ரயில்வே அதிகாரிகள், ஆகியவர்கள் எவ்வளவோ கோப மூட்டத்தக்க செய்கை செய்தாலும் தொழிலாளர்களும் பொது ஜனங்களும் பொறுமையாகவே இருக்கவேண்டுமென்றும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பொறுமையை இழந்துவிடக்கூடாது என்றும் இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகின்றது.

தொழிலாளர்கள் சுமார் 30 பேர்களுக்கும் ஒவ்வொரு வீடுகளில் ஒவ்வொரு நாள் விருந்துகள் நடந்தன..

சுமார் 100 ரூபாய் வரையில் பொது ஜனங்களிடமிருந்து பண உதவியும் கிடைத்தது. ரயில்வே அதிகாரிகள் ரிசர்வ் போலீசார்களை தருவித்து லயனில் காவல் போட்டிருக்கிறார்கள். ஊரில் உள்ள முக்கியஸ்தர்களுக்கு சி. ஐ. டி. ரகசிய போலீஸ் மோகூல் போட்டிருக்கின்றார்கள்.

சீக்கிரத்தில் ஈரோட்டில் சத்தியாக்கிரகம் தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேல் கண்ட தீர்மானங்கள் தீர்மானிக்கப்படுகையில்.

### திரு. நாயக்கர் பேசியதாவது.

சகோதரர்களே! தொழிலாளர்கள் குறைகள் உண்மையானவை என்பது எனது அபிப்பிராயம்.

ரயில்வேக்காரர்கள் இடையொன்று மூன்று நான்காயிரம் பேர்களை வேலையிலிருந்து விலக்கவேண்டும் என்று சொல்லுகின்றார்கள். அது உண்மையான சிக்கனத்தை முன்னிட்டாவது அல்லது லாபம் கட்டவில்லை என்பதற்காவது அல்லது ஜனங்களின் நன்மைக்காக ரயில் சார்ஜை குறைப்பதற்கென்றாவது இத்திட்டத்தை அனுசரிப்பதானால் எனக்கு சந்தோஷமே.

அப்படிக்கில்லாமல், சீமையில் உள்ளவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக அங்கிருந்து யந்திரங்கள் கருவிகளும் வெள்ளைக்காரர்களுக்கும் அவர்கள் சார்பாருக்கும் வேலை கொடுப்பதற்கும் இம்மாதிரி சூழ்ச்சி செய்கின்றார்கள். தென்னிந்திய ரயில்வேக்காரர் மற்ற எல்லா ரயில்காரர்களைவிட அதிகக் கொள்ளை அடிக்கின்றார்கள். மற்ற ரயில்களில் மைலுக்கு ஒரு ஆளுக்கு இரண்டரைக் காசு சார்ஜ். ஆனால் இவர்கள் நான்கு காசு நாலரைக்காசு வாங்குகிறார்கள். வண்டி சௌகரியம் மற்ற வண்டிகளைவிட எஸ். ஐ. ஆர். ரயிலில் மிகக் கொடுமையானது. சம்பளம் கூலி முதலியவைகளும் நம்மவர்களுக்கு மற்றவர்களைவிட மிகக் கொஞ்சமாகவே கொடுக்கின்றார்கள். இந்நிலைமையில் இவர்கள் சிக்கனமென்பது இந்தியர்கள் வாயில் மண்ணைப் போட்டு வெள்ளைக்காரர்கள் வயிறு வெடிக்கச் செய்யும் கொடுமையே ஆகும்.

தெற்கு ரயில்களில் நடந்த அபாயங்களுக்கெல்லாம் ரயில்வே அதிகாரிகளே காரணமாவார்கள், ஏனெனில், வேலை நிறுத்தம் செய்வதாக முன்னெச்சரிக்கை கொடுத்துத்தான் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது ரயில்வேக்காரர்கள் எச்சரிக்கையாய் இருந்திருக்கவேண்டும். ஒரு வேலை நிறுத்தம் என்றால் என்னென்ன காரியங்கள் நேருமென்பது அதிகாரிகள் அறிந்த விஷயமதான். மேல் நாடுகளின் வேலை நிறுத்த அனுபவம் தெரிந்த வெள்ளைக்காரர்கள் அலட்சியமாய் இருந்தது மிகவும் கண்டிக்கத் தகுந்தது. கலகக்காரர்களும் காலிகளும் தொழிலாளர்களிடம் அனுதாபம் கொண்ட வாலிப ரத்த ஓட்டமுள்ளவர்களும் இன்னமும் என்னென்ன செய்வார்கள் என்பது நாம் சுலபத்தில் முடிவுகட்டக் கூடியதல்ல. இதற்காக தொ

ழிலாளர்கள்மீது குற்றம் சொல்லுவது அறியாமையே யாகும்.

உதாரணமாக, திருச்சி பாலக்கரை ஸ்டேஷனுக்கருகில் லயனில்உள்ள கேட்டில் கதவில்லை என்றும் காவலில்லையென்றும் தெரிந்து வண்டியைவிட எப்படி ரயில்வே அதிகாரிகள் சம்மதித்தார்கள் என்று நான் கேட்கின்றேன். அப்படி கவலையின்றி இஞ்சின் விட்டதால் மோட்டார் பஸ்மீது ஏறி 10 பேர்கள் சுசுகசவென்று நசுங்க நேர்ந்தது. இதற்கு யாரை தண்டிக்கவேண்டும் என்பதை நீங்களேயோசியுங்கள். நல்ல அரசாங்கமாயிருந்தால் இஞ்சின்ஓட்ட ஆதாரமாயிருந்தவர்களில் 10 பேரை தூக்கில் போட்டு இனி இம்மாதிரி நடக்காமல் பந்தோபஸ்து செய்திருக்கும். அப்படிக்கில்லாமல் மேல் கண்ட 10 பேர் நசுக்கப்பட்டுப் போனதற்காக விசனப்பட்டஜனங்களைசுட்டார்களாம். இது என்னஒழுங்கு! இது அதிகாரம் இருக்கின்றது என்கிறதும் துப்பாக்கியும், குண்டும், மருந்தும், சொன்னபடி கேட்கபோலீஸ் படையும் இருக்கின்றது என்கிறதுமான ஆணவத்தை கொஞ்சமாவதும்காட்டுகின்றதா இல்லையா என்று கேட்கின்றேன். இம்மாதிரி கொடுமைகளும் ஆத்திரம் மூட்டத்தக் காரியமும் செய்துவிட்டு பொறுமையாயிருங்கள்! சாந்தமாயிருங்கள்! என்று சொன்னால் அது வார்த்தைஅளவில் இருக்குமே யல்லாது காரியத்தில் பயனளிக்குமா?

தவிர, 144 போடுவதாலும் ஜெயிலில் வைப்பதாலும் என்னகாரியத்தைசாதிக்கமுடியும்? 144ஐ மீறுவது வெகு கஷ்டமான காரியமா என்று கேட்கின்றேன். பலாத்காரமான காரியங்கள்யாராலாவது சரிநடந்ததாக காணப்படாதிருந்தால் 144 மீறும்படியே கட்டளை இட்டிருப்பேன். ஜெயிலில் போடுவதால் யாரும் பயந்துவிட மாட்டார்கள். ஜெயில் அநுபோகம் எனக்கு நன்றாய் தெரியும். மூன்று நான்கு தடவை நான் அநுபோகித்துப் பார்த்தவன். உள்ளே போய் வெளியில் வரும்போது உடல் இடை 10 ராத்தல் அதிகமாகவே தான் வரக்கூடும். ஆதலால் அந்தப் பூச்சாண்டிக்கு யாரும் பயப்படமுடியாது. மரியாதையாக தொழிலாளர் கோரிக்கைகளுக்கு இணங்கியோ அல்லது அவர்களை சமாதானப்படுத்தியோ ஒரு முடிவுக்கு வருவதுதான் நலமாக முடியும்.

கடைசியாக நான் பொதுமக்களையும் தொழிலாளர்களையும் கேட்டுக்கொள்வதாவது:— எந்தக்காரணத்தை முன்னிட்டும் பலாத்காரமும் பொறுமை இழத்தலும் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், பலாத்காரம் ஏற்படுவது அதிகாரிகளுக்கு நன்மையாகவும் நமக்கு கெடுதியாகவுமமுடியும். ஒத்துழையாமையில் போதுகூட நிலைகொன்று திருவாளர் காந்தி இயக்கத்தை நிறுத்த நேர்ந்ததற்கு காரணம் பலாத்காரம் ஏற்பட்டதுதான். அதனாலேயே தான் அவ்வியக்கம் தோல்வி அடைந்ததாக கருத நேரிட்டது. ஆகலால் பலாத்காரமில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது நமது கடமையாகும். போலீசார் மீது குற்றம் சொல்வதில் யாதொரு பயனுமில்லை. அவர்கள் சம்பளத்திற்காக மேல் அதிகாரி சொன்னபடி கேட்டும் பெங்களை இல்லாத அடிமைகள். அவர்கள் எஜமான் சொன்னபடி நடக்காவிட்டால் வேலை போய்விடும். 144 போட்ட மாஜிஸ்ட்ரேட்டிடமும் நாம் குற்றம் கண்டுபிடிப்பது முட்டாள் தனம். வெள்ளை அதிகாரிகள் சொன்னபடி உத்தரவு போடாவிட்டால் வேலை போய்விடும். அப்புறம் உபாதான மெடுக்க வேண்டியதோ கருமாந்திர வீட்டில் தக்ஷிணைக்கு போகவேண்டியதோ அவர்கள் கடமையாகிவிடும். ஆகலால் பொறுமை இழக்காமல் பலாத்காரமில்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள். எங்களாலான உதவி கடைசிவரை செய்யக்காத்திருக்கின்றோம். பலாத்காரம் ஏற்பட்டால், அதுவும் தொழிலாளர்களால் நடந்தது என்பதாக தெரிந்தால், நாங்களும் விலகிக்கொள்வோம் என்பதை கண்டிப்பாய் சொல்லுகின்றேன். மற்றபடி இங்கு நடக்கப் போவதாய் சொல்லப்படும் சத்தியாக்கிரகத்திற்கு என்னாலான பண உதவியும் ஆள் உதவியும் செய்யத் தயாராயிருக்கின்றேன் என்று சொல்லி முடித்தார்.

ஒரு நிருபர்.

## குறிப்பு.

பிரதி வாரமும் நமது பத்திரிகைகளில் சுமார் 2000 பத்திரிகைகள் உள்நாட்டுக்கு பார்சல்களில் வழக்கமாக அனுப்பிவருவதில் சென்ற ஞாயிற்றுக்கிழமை ரயில்வே அதிகாரிகள் பார்சலெடுக்க மறுத்துவிட்டதாலும் தபால அதிகாரிகளும் அப்பார்சல்களை எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டதாலும் அவைகள் இரண்டொருநாள் தங்கி பிறகு அனுப்பப்பட நேர்ந்ததை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## அடுத்தவாரம் பத்திரிகை வராது.

தவிர அடுத்தவாரத்திற்கு நமது பத்திரிகை வெளியாவது குந்தகப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம் ஏனெனில் சென்னையிலிருந்து வரவேண்டிய காகிதம் ரயில்வே வேலை நிறுத்தத்தால் தடைப்பட்டுவிட்டது, எவ்வளவு முயற்சியெடுத்தும் பலன்படவில்லை. ஆகலால் வேறுவழியில்லாததால் காகிதம்வந்து சேருமவரை மன்னிக்க வேண்டுகின்றோம்.

மானேஜர்.

# ஒரு ஆபீசருக்கும் குடியானவனுக்கும் சம்பாஷணை.

(சித்திரபுத்திரன் எழுதுவது)

குடியானவன்— என்ன சார், தங்களிடம் தனித்து சற்றுநேரம் பேசவேண்டும் என்கின்ற எண்ணம். ஏனென்றால் நாம் இருவரும் வெகுநாளைய சிநேகமல்லவா? ஆதலால் சில விஷயங்களைத் தெரிவிக்கவேண்டும் என்கின்ற ஆசை எனக்கு உண்டு.

ஆபீசர்— ஆ! ஆ!! பேஷா பேசலாம். இப்பொழுதே வாருங்கள்; என்ன விசேஷம்.

கு— விசேஷம் ஒன்றும் இல்லை; தாங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. சிநேகித விஷயத்தில் மனம் பொறுக்கவில்லை; ஆதலால் தங்களிடம் சொல்லித்தீரவேண்டும் என்கின்ற கவலை கொண்டுவிட்டேன்.

ஆ— என்ன இவ்வளவு யோசிக்கின்றீர்கள்; கோபம் என்ன வந்தது; தாராளமாய்ச் சொல்லுங்கள். என்ன விசேஷம்.

கு— கொஞ்சகாலமாகத் தங்களுடைய சம்சாரத்தின் நடத்தை சரியாய் இல்லை. எந்நேரம் பார்த்தாலும் நம்ம வீட்டுக்கு அடுத்த வீட்டுத்தையல்காரனிடமே சகவாசம் வைத்துக் கொண்டிருக்கின்றதாகத் தெரிகின்றது. சில சமயங்களில் அந்த தையல்காரன் அந்த அம்மாளை அடிக்கின்றதாகவும் தெரியவருகின்றது. இதைப்பற்றி ஊரிலும் பலவிதமாகப் பேசிக் கொள்ளுகின்றார்கள். இதைத் தங்களிடம் தெரிவித்துவிடவேண்டும் என்று துணிந்துவிட்டேன்; மன்னிக்கவேண்டும்.

ஆ— இதில் மன்னிக்கவேண்டிய சங்கதி ஒன்றுமில்லையே. தாங்கள் சொல்லுவது உண்மையாகவும் இருக்கலாம். ஏனென்றால் அந்தக் கழுதையை என் சம்சாரம் அல்ல என்று விலக்கி பல வருஷமாகி விட்டது. எப்பொழுது ஒருகான்ஸ்டேபிளை இழுத்துக்கொண்டு போய் இரண்டு மாதம் வரையில் காணாமல் இருந்தாளோ அன்று முதலே நான் 'இனி அவள் என்னுடைய சம்சாரமல்ல' என்பதாக தீர்மானித்து விட்டேனே. இது தங்களுக்கு தெரியாதா?

கு— இந்த விஷயமெல்லாம் எனக்குதெரியவே தெரியாது. தாங்கள் சொல்லத்தான் தெரியவருகின்றது, ஆனால் அந்தம்மாள் தங்கள் வீட்டில் தங்களுடன் தானே இருக்கிறார்கள்?

ஆ— அதனாலென்ன? முன்பு அவளை அடித்துக்கொண்டு போன கான்ஸ்டேபிள் அவளிடம் இருந்த நகையை பிடுங்கிக் கொண்டு விரட்டி விட்டு விட்டான். அவள் இந்த ஊர் சத்திரத்தில் வந்து திண்டாடுவதாக கேள்விப்பட்டேன். நேரில் போய்ப் பார்த்தேன். அவள் அழுதாள். அதற்கு நான் "நீ என்னைவிட்டு ஓடிப்போன அன்று முதலே உன்னை என் சம்சாரமல்லஎன்று தீர்மானித்து விட்டேன்; இனிமேல் எனக்கும் உனக்கும் புருஷன் பெண்சாதி என்கிற பாத்தியமும் இல்லை." என்று கண்டிப்பாக சொல்லிவிட்டேன் பிறகு அவள் வருத்தப்பட்டதைப்பார்த்து மறுபடியும் 'உனக்கு என்னிடம் வாப்பிரியமிருந்தால் உன்னை நான் ஒரு தாசி மாதிரியாகக் கருதி உன்னிடம் நேசம் வைத்துக் கொள்ளுகின்றேன். இஷ்டமிருந்தால் என்னோடு வா" என்று சொன்னேன். அவளும் அதற்கு சம்மதித்து என்னோடு வந்தாள். நானும் வீட்டிற்கு கூட்டிக்கொண்டு போய்விட்டேன். இப்போது அவளை ஒரு தாசி மாதிரியாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் தாசிவீட்டுக்குநான் போவதற்குபதிலாகஎன் வீட்டிற்கு அவளை வரவழைத்துக் கொள்கிறேன். அடிக்கடி அவள்போய்விட்டுவருவதற்குபதிலாக என் வீட்டிலேயே இருக்கும்படி சொல்லிவிட்டேன் குழந்தைகள் விஷயத்

# மலாய் நாட்டுத் "தமிழ் நேசனின்" கோலம்.

"குடி அரசும்" அதன் பத்திராதிபர் நாயக்கரவர்களும் தமிழ் மக்கட்கு எத்தனையோ விதத்தில் நன்மைசெய்து வருகின்றதை அதன் விரோதிகளும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால்,

நம் நாட்டினின்றும் எத்தனையோ மைலுக்கப்பால் கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் "தமிழ் நேசன்" (பார்ப்பன நேசன்) "சுயமரியாதை அற்றொழிய வேண்டுமென்றும், பார்ப்பனீயமும், இதிகாசபுராணங்களும், ஸ்மிருதிகளும் மக்கட்கிடையே, முன்போலத் தலைவிரித்தாட வேண்டுமெனவும் ஓலமிடுகின்றது. என்னே! இப்பத்திரிகையின் மதியீனம்! நம்மவரின் தற்கால அடிமைத்தனமான நிலைமைக்கு முக்கியகாரணம், இந்துமதப் புரட்டர்களின் ஜெகஜாலங்களும், அதன் துணைக்கருவிகளாகிய இதிகாச புராணங்களும், ஸ்மிருதிகளுமென யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிற இந் நாட்களிலும்கூட இப்பத்திரிகையின் மிலேச்சத்தன்மையான எண்ணத்தை நினைக்குங்கால் விடாநகைப்பு உண்டாகிறது.

வயிற்றுப் பிழைப்புக்கு மாரடிக்கும் இப்பத்திரிகை தன்னைத்தான் திருத்திக்கொண்டு மற்றவர்களைத் திருத்தும் தொழிலை தொடங்கட்டும். "தமிழ் நேசன்" எனப்பெயர் பூண்டுகொண்டு, இப்பத்திரிகை தமிழர்களுக்கு விரோதமாய், குருடனும் வாசிக்கத்தக்க அவ்வளவு பெரிய எழுத்தில் அதன் முதற் பக்கத்திலேயே "டீபீர்" என்று விளம்பரம் செய்து "இதுவே ஆகாரமும் பானமும் ஆகிறது" என்று ஏழைகளான மலாய் நாட்டு இந்தியரையும் தமிழரையும் ஏமாற்றுகிறதை யாவரும் அறிவார்கள்.

இத் "தமிழ் நேசன்" டீபீரையும், ரிவால்வர் ஸ்டௌட்டையும் அமிர்தமென்று நினைத்ததோ அல்லது அதற்கு அக்கிரகாரம் நெருங்கி சிநேஷமும் இழுக்கிறதோ தான் என்னவோ? இவர்கள் போன்றவர்களைக் கண்ட மிஸ். மேயோ "இந்தியத் தாய்" என்ற புஸ்தகத்தை எழுதாமல் வேறு என்ன தான் செய்திருப்பாள்.

உலகிற்கு நன்மை செய்கிறவர்களைக் கெடுக்க குறுக்கே விழுந்து அனேக சுயநலமிகள் தோன்றுவது இயற்கையே. ஆனால்இச் சுயநலமிகள்வெகு சீக்கிரத்தில்குழிக்குப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுகிறவர்களைப் போலாவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

வயிற்றுச் சோற்றுத் தேச பக்தர்கள் என்னும் மாயா ஜாலக் காரரின் அக்ரமகத்தைக் "குடி அரசு" முற்றத்துக்கு இழுக்கிறதனால் அதன்மேல் சிலருக்கு வெறுப்பு இருக்கலாம். அப்பேர்ப்பட்ட விபீஷணர்களைக் "குடி அரசு" அம்பலத்தில் இழுத்து ஆட்டுவதுபோற்றத்தக்கது. ஆகலினால்இம் மலாய் நாட்டுக் குட்டிச்சாத்தான், நாயக்கர் வலியப் போர்தொடுக்கின்றார் என்று ஒப்பாரி வைப்பதை யாரும் பொருட்படுத்த மாட்டார்கள்.

மக்கட்கிடையே சுயமரியாதையை விளக்கி, மூடநம்பிக்கையையும், பார்ப்பனர்களுக்கு மதத்தின் பேரால் கொடுக்கும் வரியையும் ஒழித்துவரும் திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் அவரது பத்திரிகை "குடி அரசு"ம் நீடூழி வாழ்க!!

சுயமரியாதை வாழ்க. பார்ப்பனீயம் வீழ்க.

மலாயா நாட்டில் வசிக்கும் இந்தியன்.

---

தினும், ஒருவதற்கு முன்பிறந்த குழந்தைகளை என் சொந்தக்குழந்தைகள் மாதிரிதான் வைத்திருக்கின்றேன். திரும்பி வந்ததற்குப் பின் பிறந்த குழந்தைகளை தாசிக்குப்பிறந்த குழந்தை மாதிரி தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். தவிர, என் குழந்தைகளையும் அவளையேபார்த்துக் கொள்ளும்படியாய்க் கேட்டுக்கொண்டேன். அவளும் தன்குழந்தைகள்மாதிரியே பார்த்துக்கொள்ளுகின்றாள். அவ்விதத்தில்அவள் உத்தமியென்றே சொல்லவேண்டும்.

கு—அப்படியானால் அடிக்கடி டெய்லர் [தையல்காரன்] வீட்டில் இருக்கக்காண்கின்றேனே அதன்காரணம் என்ன?

ஆ—என்னமோகாரணம் இருக்கலாம் அதைப்பற்றி நமக்கு என்கவலை? நாமோ அவளை ஒருதாசிபோல் நினைத்து தாசியை வைத்துக்கொண்டிருக்கிறது போலவே கருதிக்கொண்டிருக்கின்றோம். அப்படியிருக்க நமக்குஅனாவசியமான கவலைஎதற்கு? அவள் எங்குபோனால் நமக்கென்ன? என்றுநான் அதில் என்நேரத்தை ஒரு சிறிதும் வீணாக்குவதேயில்லை.

ஆனால் அந்த டெயிலரிடம் அப்படிவாதாக சொல்லுகின்றீர்களே; அதைக்கேட்க நமக்கு சற்று பரிதாபமாகத்தான் இருக்கின்றது; என்னசெய்யலாம்? பாவம் அந்த டெயிலார் ஒருசமயம் இவளை தன் சம்சாரமாக நினைத்துக்கொண்டிருக்கலாம். அவளும் அவனை தன்புருஷனாக நினைத்துக்கொண்டிருந்தாலும் இருக்கலாம். அப்படியிருந்தால் அடிக்க வேண்டியதும் அடிபடவேண்டியதும் நியாயந்தானே நானும் அவளை என்சம்சாரம் என்று நினைத்துக்கொண்டிருக்கும்போது நன்றாய் உதைத்துக்கொண்டுதான் இருந்தேன். அதற்கு நாம் என்னசெய்யலாம்

கு:—சரி சரி இப்பொழுதுதான் தங்களுடைய கொள்கை (பிரின்சிபில்) எனக்குவிளங்கிற்று. அனாவசியமாய் தங்கள்நேரத்தை கெடுத்ததற்காக மன்னிக்கவேண்டும். நான் போய் வருகிறேன்.

ஆ—சரி போய்விட்டு வாருங்கள் இதைத்தவிர வேறு விஷயமில்லையே.

கு—இல்லை.

# மதிப்புரை.

## காப்பித்தூள் வரப்பெற்றோம்.

பட்டிவீரன்பட்டி திரு. A. C. மணி நாடார் அவர்கள் தயாரித்து விற்பனை செய்யும் "அசல் ரோதை காப்பித்தூள்" மாதிரிப்பொட்டலம் ஒன்று வந்தனத்துடன் வரப்பெற்றோம். ஷை காப்பித்தூளை உபயோகித்துப் பார்த்ததில் அது நல்ல வாசனையுள்ளதாயும் ருசியுள்ளதாயும் இருக்கிறது. காப்பி உபயோகிப்பவர்கள் ஷையார் தயார் செய்யும் காப்பித்தூளை வரவழைத்து உபயோகித்தால் மிகுந்த திருப்தியடைவார்கள் என்பதில் ஐயமில்லை. மாதிரிப் பொட்டலம் 1-க்கு விலை அரையணா தான். வேண்டுவோர்

A. C. மணி & கோ,
காப்பித்தூள் தொழிற்சாலை,
பட்டிவீரன்பட்டி.

என்ற விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

# சுயமரியாதைப் பிரசாரங்கள்.

சுயமரியாதைப் பிரசாரங்கள் பல இடங்களில் நடந்து வருவதாகச்செய்திகள் எட்டுகின்றன. அவற்றில் பேசுகிறவர்கள் பலமாதிரி பேசுவதாகவும், அதைக்கேட்கிறவர்கள் பல விதமாய் அர்த்தம் செய்துகொள்ளுவதாயும், சிற்சில சமயங்களில் விபரீத அர்த்தம் ஏற்பட்டு விடுவதாகவும் தெரிய வருகிறது. அவ்விபரீதத்தை நிறுத்துவதற்காக குறைந்தது பதினைந்து நண்பர்களை தயார் செய்யும் பொருட்டு ஈரோட்டில் ரயில்வே ஸ்டேஷனுக் கடுத்த திரு. வெங்கட்ட நாயக்கர் தோட்டத்திலுள்ள ஒரு கொட்டகையில் "சுயமரியாதைப பிரசார போதனைக் கூடம்" என்பதாக ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் ஒரு மாத காலத்திற்கு, தினமும் இரண்டு காலம் ஒவ்வொரு மணி நேரம உபந்யாசங்களின் மூலமும், மற்றும் சம்பாஷணை, 'குடி அரசில்' கண்ட வியாசங்கள் முதலியவை மூலமாகவும் கற்பித்துக் கொடுக்க முடிவுசெய்திருக்கிறோம். கர்லாவதி யொன்றுக்கு பதினைந்து பேர்களை சேர்த்துக் கொள்ளக்கூடும். அவர்களில் சௌகர்யமில்லாதவர்களுக்கு இலவச சாப்பாடு போடப்படும். இஷ்டமுள்ளவர்கள் தெரிவித்துக்கொண்டால் ஏற்றுக்கொண்ட விஷயத்துக்கும் வரவேண்டிய விபரத்துக்கும் மற்ற நிபந்தனைகள் விபரத்துக்கும் தெரிவிக்கப்படும். ஈ. வெ. ராமசாமி-

# தொழிலாளர்களுக்கு தொழிலாளர் தலைவரின் கடைசி வார்த்தை.

தொழிலாளர் தலைவர் D. கிருஷ்ணசாமி பிள்ளையவர்கள் கைதுசெய்யப்பட்டு அழைத்துச்சென்றபோது தொழிலாளர்களுக்கு விடுத்த கடைசி நன்மொழிகள்.

"விடாமுயற்சிகொண்டு ஒற்றுமையாகவும், உறுதியாகவும் நடந்துகொள்ளுங்கள். ஏஜண்டு ஏமாற்றங்களை நம்பி ஏமாந்து போகாதீர்கள். சாந்தமாகவும், அமைதியாகவும், பலாத்கார மில்லாமலும் நடந்துகொள்ளுங்கள். நாங்கள் கைதுசெய்யப்படுகிறோமென்று ஆயாசமடைந்து காரியத்தை நழுவவிடாதீர்கள். எவ்வளவுக் கெவ்வளவு அஹிம்ஸா தர்மத்தைக் கடைப்பிடித்து மௌனமாக நடந்துகொள்ளுகிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு நமது வெற்றிநெருங்கி வருகிறதென்பதை மறந்துவிடாதீர்கள். எல்லோருக்கும் எனது வணக்கம்."

D கிருஷ்ணசாமி.

கிருஷ்ணகிரியில்

## சுயமரியாதை உதயம்.

### பார்ப்பனீயம் ஒழிந்த சடங்குகள்.

கிருஷ்ணகிரி யூனியன் போர்டு தலைவர் திரு. ஜி. அனுமந்து நாயுடு அவர்கள் சில நாட்களுக்கு முன் தமது வீட்டில் நடந்த குழந்தை பிறப்புச்சடங்கை மோக்ஷத்திற்கு டிக்கட்டு கொடுப்பதாகச் சொல்லும் அயோக்கிய பார்ப்பனர்களை அறவே ஒழித்து சுயமரியாதை முறையில் நடத்தினார்கள்.

சுயமரியாதை உணர்வு பெற்றவர்களில் ஒருவரான தவுல்தாபாத் திரு. ஜி. ராமசாமி நாயுடு அவர்களும் தமது இல்லத்தில் சென்ற 20—7—28ல் நடந்த குழந்தை பிறப்புச் சடங்கை பார்ப்பனீயத்தை ஒழித்து தாமே சுயமரியாதை முறையில் வெகு சிறப்பாக நடத்தினார்கள். அவ்வமயம் கிருஷ்ணகிரியில் சுயமரியாதைக்கு வழி காட்டியான திரு. ஜி. அனுமந்து நாயுடு அவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். சடங்கு முடிந்ததும் திரு. நாயுடு அவர்கள் அவ்விடம் விஜயம் செய்திருந்தவர்களைப் பார்த்து, பார்ப்பான் சடங்குகளுக்கு வந்து வீட்டில் தண்ணீரை தெளித்து விட்டால் தீட்டு தீர்ந்து விடும் என்பது மூட நம்பிக்கை என்றும், பாப்பான் ஒவ்வொரு சடங்கையும் தன்னுடைய சுயநலத்திற்காகவே ஏற்படுத்தியிருக்கிறானென்றும், இந்த அயோக்கியத்தனத்தை கண்டறிந்தே சில தினத்திற்குமுன் நம்மவர்களை 'மோக்ஷத்திற்கு' அனுப்ப வந்திருந்த குல்குரு என்னும் பார்ப்பனனிடம் தாமும் தம் வீட்டிலுள்ளோரும் போய் தீர்த்தம் வாங்கிக்கொள்ளவில்லை என்றும், இனிமேல் நம் சமூகத்தில் நடக்கும் எந்த விதமான சுபாசுப காரியத்திற்கும் பாப்பானை கூப்பிடக்கூடாதென்றும், உதாரணமாக கூடிய சீக்கிரம் நம் சமூகத்தில் நடக்கப்போகும் திருமணங்களை (பாப்பானையும அவன் மந்திரங்களையும் துரத்தியடித்து) வைக்கம் வீரர் உயர்திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களைக்கொண்டு சுயமரியாதைத் திருமணங்களாக நடத்தப் போவதாகவும் பலவாறு பசு மரத்தாணிபோல் அந்த சமூகமக்கள் மனதில் பதியும்படி வெகு உற்சாகத்துடன் பேசினார். திரு. நாயுடு அவர்களின் சொற்பெருக்கை எல்லோரும் ஆக்ஷேபணையின்றி முழுமனதுடன் ஏற்றுக்கொண்டது மிகவும் பாராட்டத்தக்கது. பின்பு விஜயம் செய்திருந்த எல்லோருக்கும் தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு போஜனம் அளிக்கப்பட்டது. பார்ப்பனீயம் வீழ்க! சுயமரியாதை வாழ்க!

ஒரு நிருபர்.

---

8-பக்கம் தொடர்ச்சி.

திநாயனார் கைலைக்கு எழுந்தருளுகின்றார்" என அறிந்து அத்திக்கு நோக்கி வணங்கியதாகவும் அதைப்பார்த்த மற்ற முனிகள் சிவபிரானைத் தவிர மற்ற யாரையும் வணங்காத தாங்கள் இங்கு வணங்கிய காரணம் யாது" என்று கேட்டதாகவும் அதற்கு உபமன்யு முனிவர், ஒரு காலத்தில் சிவபெருமான் தன் உருவத்தை கண்ணாடியில் பார்த்ததாகவும் அதுசமயம் அவருடைய அழகு திரண்டு உருண்டு ஒரு உருவமாய் தோன்றியதாகவும் அதற்கு சுந்தரர் என்று பெயர் கொடுத்ததாகவும், அவர் அச்சிவபெருமானின் ஆணையால் கைலையைவிட்டு தென்னாட்டிற்கு வந்து உலகமுய்ய தேவாரப் பாடிவிட்டு அதுசமயம் கைலைக்கு வெள்ளை யானைமீது போய்க்கொண்டிருப்பதாகவும் அந்த ஒளிதான் இவ்வளவு பிரகாசம் என்று சொன்னதாகவும் அதுகேட்ட அங்கிருந்த மற்ற முனிவர்கள் "அப்படியானால் அப்பெரியாருடைய (சுந்தரருடைய) சரித்திரத்தை எங்களுக்கு சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு அந்த உபமன்யுமுனிவர் அச்சுந்தரர் சரித்திரத்தையும் அச்சுந்தரரால் செய்யப்பட்ட திருத்தொண்டர் தொகையில் காணும் மற்ற தொண்டர் சரித்திரத்தையும் சொன்னார் என்பதாக ஒரு வரலாறு காணப்படுகிறது. இரண்டாவதாக (தொடரும்.)

---

"சுதேசமித்திரன்" நிருபரின்

## ஜாதிப்புத்தி.

நிகழும் ஜூலை மாதம் 17-தேதி வெளியான "சுதேசமித்திரன்" பத்திரிகையில் ஒரு மூலையில் "பூஜையில் கரடி" என்ற தலைப்பின் கீழ் கோவை ஜில்லா போர்டார் கனம் சுப்பராயனுக்கு 16-ந்தேதி உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுத்த போது மந்திரி பதிலளித்தபின் ஸ்ரீமான் கே. பி. வெங்கடாசலம் செட்டியார் எழுந்து மந்திரியையும் ஜில்லா போர்டு தலைவரையும் கண்டித்துப் பேசினாரென்றும் சிறிது குழப்பமேற்பட்டதென்றும் காணப்படுகிறது.

இம்மித்திரன் நிருபர்களின் யோக்கியதையைப்பற்றி எத்தனையோ முறை எத்தனையோ பேர் எழுதியும் அவர்களுக்கு புத்தி வரவில்லையென்றால் அது அவர்களின் ஜாதிப்புத்தி யென்றுதான் சொல்லவேண்டும். ஷை ஸ்ரீமான் கே. பி. வெங்கட்டராம செட்டியார் என்பவர் ஷை கூட்டத்தில் பேசியது உண்மையே. ஆனால் அவர் தமது வயிற்றெரிச்சலைக் காட்டிக்கொண்டாரேயன்றி குழப்பம் உண்டாக்கக் கூடிய எதுவும் பேசவில்லை. அவருடைய பேச்சு முடிந்தபின் ஒரு கரகோஷம் கூட இல்லை. அவர் தலைவரின் அனுமதியில்லாமல் எழுந்து பேசிய ஒழுங்கற்ற முறைக்காக மன்னிக்க வேண்டுமென்று தலைவரை மன்னிப்பும் கேட்டுக்கொண்டுமிருக்க, அதுசமயம் சபை மிக்க அமைதியுடனும் இருக்க மித்திரன் நிருபர் குழப்பமேற்பட்டதாக, மித்திரனுக்கு செய்தியனுப்பியிருப்பது நிருபரின் முதல்தரமான அயோக்கியத் தனத்தையே காட்டுகிறது. இத்தகைய இழிகுணம் மித்திரன் நிருபர்களுக்கு என்றுதான் நீங்குமோ தெரியவில்லை.

கண்டதுரைப்போன்.

---

சுயமரியாதையும்

